# கடைதிறப்பு

கவிஞர் முருகு சுந்தரம்

குறளியம் வெளியீடு

முருகுசுந்தரம்

# கடை திறப்பு

குறளியம் வெளியீடு

கடை திறப்பு (பாடல்கள்)
© முருகுசுந்தரம்
(20—12—1930)
ஈரோடு-3

ஓவியம்
ஆனந்தன்
கார்த்தி

இரண்டாம் பதிப்பு
மார்ச்சு 1981

அச்சு
வேலா அச்சகம்
ஈரோடு-1

வெளியீடு
அ. பெ. எண்—2
குறளியம், ஈரோடு-638 001

விலை உருபா 5-00

# அக்கம் பக்கம்

படித்துறை

●

இந்நூலைப்பற்றி

●

கடைதிறப்பு : சொற்பொழிவுகள்

கட்டாரி நீட்டுகின்றார்
குடந்தூக்கும் குங்குமப்பூ
கண்ணீரில் கரைகின்றேன்
தொட்டில் துரைத்தனம்
அணிவகுப்பு ஓய்ந்தது
எச்சிலிலை நாகரிகம்
கூடல் நகர்பெற்ற பாடல்
தன்மானச் சூறைக்காற்று

கடிதங்கள்

வேனில் வேதனை
கற்புச் சிறை
மாற்றான் தோட்டத்து மல்லிகை
விருந்துக்கு வந்த விருந்து
அன்பே என் மேகலையே!
தெய்வீகப் பெருஞ்சுமை
கங்கையின் காதலன்

# படித்துறை

முருகு கால் நூற்றாண்டுகள்
என் அருகிருந்து பழகிய நண்பர்;
பாட்டுக் குயில்; இன்னிசை எழுத்தருவி !

தமிழகப் பாட்டரங்குகள்
இவரை ஏந்திப் புகழ்பெற்றன.
தமிழ்ப் பாட்டிலக்கியம்
இவர் எழுத்தால் புகழ்பெற்றுக் கொண்டிருக்கிறது.

கடை திறப்புக்கு இது
மறுமணப் பதிப்பு.
இதில் உள்ள பாடல்கள்
இந்தியிலும் ஆங்கிலத்திலும்
மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

உலகப் புகழ்பெற்ற
பேச்சுக்களும் கடிதங்களும்
கற்பனை நயத்தோடு கவிதையாக்கப்பட்டுள்ளன.

'முருகு' என்ற சொல்லுக்கு
இளமை, அழகு என்ற பொருளுண்டு.
இளமையும் அழகுணர்ச்சியும்
இந்நூலில்—
வரிக்கு வரி போட்டியிடுகின்றன.
பொருள் புதிது; சுவையும் புதிது.

வரலாறு படைக்கும் தரமான நூல்களை
வெளியிட்டுப் புகழ்பெற்ற வேலாவின் குறளியம்
இந்நூலை வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறது.

ஈரோடு-1
1—3—81

வேலா இராசமாணிக்கம்

# இந்நூலைப்பற்றி......

## டாக்டர் தமிழண்ணல்

கவிதையில் பழகு தமிழும் அழகு நடையும் ஆற்றொழுக்கான ஓசையும் அமைந்துள்ளமைகண்டு பாராட்டுகிறேன்.

'கிளியுடம்புத் தாமரையின் இலை'

நல்ல நிற உவமை.

'காலடியால் காதலரை வேவு பார்க்கும்
காமன்'

நல்லதொரு கற்பனை.

'அரைவட்டத் தாவணியை விரித்துத் தோகை
அழகுமயில் ஆடும்போது'

மயிலாட்டம் கண்ணெதிரே காட்சியளிக்கிறது.

'ஏமாற்றக் கன்னி யானேன்
இலையுதிர் காலமானேன்'

என்பதில்தான் எத்துணை அவலம்?

கருக்கொண்ட நிலையில் ஒரு பெண்

'பொன்னுடல் காரி யின்று
பொருளுடல் காரி யானேன்;
என்மடி கனத்துப் பார
இளநீர்த்தெங் காகி விட்டேன்'

என்றுரைப்பதிலே நல்லதொரு நயம் மிளிர்கிறது.

'பண்மொழி! கவிஞரைப்போல்
படைப்பாற்றல் நமக்குத் தானே?'

என்னும்போது கவிஞர்களும் பெண்களும் படைப்பாற்றல் உடையவர் என்று கூறுவது மிகப் பொருத்தம்.

தமிழைப் பற்றிய அரிய கருத்து:

'திங்கள்வாழ் மண்டிலத்தில்
தென்னாப் பிரிக்க நாட்டில்
துங்குவாழ் மலேயா சாவா
தொலைவு மோரீசில், மற்றும்
எங்குவாழ் கின்ற போதும்
இத்தமிழ்க் குலத்தைச் சேர்க்கும்
சங்கிலி தமிழே என்று
சாற்றுவாய் அன்புத் தோழி!'

## டாக்டர் எழில்முதல்வன்

'கடைதிறப்பு' ஒருவகையில் உணர்ச்சியின் மடை திறப்பாக இருக்கிறது. முற்றிலும் புதிய நோக்கில் அமைந்த இக் கவிதைகளைப் படித்துப் படித்து மகிழ்ந்தேன்: சொல்லாட்சிச் சிறப்பு, உவமை நலம், கூறும் முறை அனைத்தும் புதுமையே! அண்மைக் காலத்தில் வெளிவந்துலவும் கவிதை நூல்களில் நான் படித்தவரை, கடை திறப்பு தனி இடத்தைப் பெறுகிறது.

## பேராசிரியர் இ. சு. பாலசுந்தரம்

'முருகு' என்ற சொல்லின் பொருள்கள் முழுமையும் நூலுக்குப் பொருந்தும். எண்ணக் குழந்தைகளைக் கவிதையெழில் பொங்கப் 'பிரசவம்' செய்திருக்கிறீர்கள். நூலை 'அசை' போட்டு வருகிறேன். விரைவில் சீர் தூக்கி, காமஞ் செப்பாது வாய்மையோடு 'தளை' செய்து

அஞ்சல் யாப்புச் செய்கிறேன் 'அணி' பெற்ற தங்கள் கவிதையணங்கு அடுத்த தாய்மைப் பேற்றைப் பத்துத் திங்களுக்கு முன்பே அடையட்டும். அதில் எங்களுக்கு ஆவலும் அவசரமும் அதிகம். 'பாரதி-பாரதிதாசனுக்குப் பிறகு கவிதை நூலின் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லிக் கேட்டு வாங்கும் நூலாக இது இருக்கிறது' என்று மதுரை மீனாட்சி புத்தக நிலைய உரிமையாளர் சிலிர்ப்புச் செய்தி தருகிறார்.

## குயில் (பாவேந்தர் நினைவிதழ்)

கவிதையுலகில் புதுப்புது மாறுதல்கள், புரட்சி எண்ணங்கள் புதுக்கி மின்னிக் கொண்டிருக்கின்றன. தமக்கெனச் சிலர் தனியானதோர் நடையினை ஏற்படுத்திக் கவிதையுலகினைச் சிறக்கச் செய்கின்றனர். அத்தகு வரிசையிலே 'கடை திறப்பும்' ஒன்று. கவிஞரின் முயற்சி புது முயற்சி எனினும், புரட்சி முயற்சியாகும். புதுமை இலக்கியங்கள் தமிழில் தோன்றுவதற்குரிய வரிசையை நினைவுபடுத்துகிறது 'கடை திறப்பு'.

## முரசொலி

இதுவரை கவிதை விமரிசனம் செய்த மற்றைய கவிதை நூல்களுக்கும் இதற்கும் முற்றிலும் வேறுபாடுண்டு. ஏனைய நூல்களைப்போல் ஏதோ எழுத வேண்டும் என்பதற்காக எழுதப்பட்ட நூலன்று இந்நூல். ஒப்புபர்வற்ற கருத்துச் செறிவும், கற்பனை நயமும் நிறைந்த நன்னூல் 'கடை திறப்பு'. இதைப்போன்ற தரம் வாய்ந்த கவிதை நூல்கள் சில ஆண்டுகட்கு ஒருமுறை தான் வருகின்றன. தமிழ்ப் பற்றுடையோர், இலக்கியம் வளர வேண்டுமென்று நினைப்போர் கட்டாயம் படித்து இன்புற வேண்டிய நூல் கடைதிறப்பு.

# கட்டாரி நீட்டுகின்றார்.

ஏதென்சு நகர மக்கள் பேரவை கூடியிருக்கிறது. சிந்தனைச்சிற்பி சாக்ரட்டீசு குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்டிருக்கிறார். நாத்திகத்தைப் பரப்புகிறார் என்பதும், இளைஞரின் பிஞ்சுள்ளங்களில் நஞ்சைத்தூவு கிறார் என்பதும் அவர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு கள். அஞ்சாமை மிக்க ஆண்மைச் சொற்களுக்கு, இப்பேச்சு ஒரு முன்மாதிரி. மேலை நாட்டுச் சிந்தனை யில், கருத்தாழத்தோடு முளைத்த கன்னிப்பேச்சு இது.

ஏதென்சு நாட்டவரே ! குன்றெடுத்த
எர்குலிசின் பரம்பரையே ! அத்து மீறிக்
காதலித்துக் கரையோரம் ஆயிரம் போர்க்
கப்பல்களை வரவழைத்த அழகுப் பூசல்
மாதரசி ஹெலனுக்குப் பின்பி றந்த
மறவர்களே ! இறவாமல் இனிக்கும் காதற்
காதைக்குள் கவிதைக்குள் வாழும் ஹோமர்
கால்வழியில் வந்தவரே ! கிரேக்க மக்காள் !

எழுத்துக்கள் அணிவகுக்கும் வாக்கி யத்தின்
எல்லையிலே நிற்கும்வினாக் குறியைப் போலக்
கிழத்தன்மை யால்முதுகு வளைந்து விட்டேன்.
கேள்வியினால் இந்நாட்டு மடத்த னத்தை
முழம்போட்டுப் பார்ப்பதுதான் எனக்கு வேலை!
முட்டாளை மூக்கறுத்தேன் என்ப தல்லால்
பிழையென்ன, செய்துவிட்டேன் நாட்டில் ? இந்தப்
பேரவையில் அமர்ந்திருப்போர் சிந்திக் கட்டும்.

நாத்திகனாம் ; நல்லிளைஞர் பிஞ்சு நெஞ்சை
நஞ்சாக்கி விட்டேனாம் ; அவருள்ளத்தில்
காத்திருந்து கன்னக்கோல் வைக்கின் றேனாம் ;
கதைக்கின்றார். நானென்ன கன்னிப் பெண்ணா ?
பாத்தியிலே தலைநீட்டும் களைகள், நல்ல
பயிர்ச்செடியை அழிப்பதற்கு நிற்பதைப்போல்
காத்திருக்கின் றார் என்னை அழிப்ப தற்கு.
கட்டாரி நீட்டுகின்றார் முதுகுப்பக்கம் !

செருப்பெனக்கு வெறுங்கால்கள் ; வானக் கூரை
சிந்துகின்ற பனிவியர்வை எனக்குப் போர்வை.
சுருக்கத்தை என்வயிறு பெற்ற தன்றிச்
சுவையுணவைப் பெற்றதில்லை; பசியால் மேனி
உருக்குலைந்த காலத்தும் பிறர்க்குத் தீமை
உள்ளத்தால் நினைத்ததில்லை; பணத்தைத்தேடித்
தெருத்தெருவாய் அலைந்ததில்லை; எனது நேர்மைத்
திறத்துக்கு வறுமையொன்றே சான்று போதும்.

வில்லாற்றல் வீரனுக்கு வெற்றி ; பெண்டிர்
விழியாற்றல் காதலுக்கு வெற்றி ; தேனைச்
சொல்லாக்கித் தருகின்ற புலவனுக்குச்
சுவையாற்றல் தான்கவிதை வெற்றி; வெல்லும்
சொல்லாற்றல் பெற்றிருக்கும் எனக்கு முன்னால்
சுள்ளியைப்போல் ஒடிந்தவர்கள் ஒன்றாய்க் கூடி
மல்லுக்கு நிற்கின்றார் ; சேற்றில் யானை
மடிகிறது ! மாய்க்கிறது நரியின் கூட்டம் !

ஆயிரமாய் விண்மீன்கள் பூக்கும் ; வானில்
அந்திநிலா என்னைப்போல் ஒன்றே பூக்கும்.
தாய்வயிற்றைக் கீறிவரும் நண்டுக் கூட்டம்
தரையின்மேல் பலகோடி ; ஆனால் அஞ்சப்
பாய்ந்துவரும் சிங்கங்கள் நாட்டில் உள்ள
பகுத்தறிவு வாதிகள்போல் ஒன்றி ரண்டே !
ஓய்வின்றி நான்நடத்தும் நாக்குச் சண்டை
உங்களுக்குள் ஒருசிலரின் சார்பா கத்தான்.

பிறப்புக்குப் பகையான சாவில், என்னைப்
பிடர்பிடித்துத் தள்ளுகிறீர் ; மாந்தர் வாழ்வில்
இறப்பென்றால் வேறென்ன ? கனவு கூட
இடையூறு செய்யாத இனிய தூக்கம் !
இறப்புக்கு நானஞ்ச வில்லை ; ஆனால்
என்சாவு தற்கொலைதான் உங்க ளுக்கு !
சிறப்பான நல்லறிஞன் என்னை விட்டால்
சீக்கிரத்தில் வேறொருவன் கிடைக்கமாட்டான்.

பறந்துவரும் வேலுக்கும் கண்சி மிட்டும்
பழக்கமறி யாதவன்; முன் வைத்த காலை
மறந்தும்நான் மாற்றிவைத்த தில்லை: போர்ப்புண்
மலிந்திருக்கும் தழும்புமலை என்றன் தோள்கள்!
பிறந்தநொடி முதல்இன்று வரைக்கும் அச்சப்
பேயைநான் சந்தித்த தில்லை ; ஆனால்
அறங்கூறும் நாக்குக்கும் கொடும்ப ழிக்கும்
அஞ்சாமல் நானென்றும் இருந்த தில்லை.

இறப்புக்குப் பின்னாலே வீட்டு வானம்
இருக்கின்ற தென்கின்றார் ; உண்மையாயின்
நிறப்பளிங்குப் பட்டுடம்பை, அழுக்கில் லாத
நிலாமுகத்தைப் பொற்சரிகைக் கூந்தற் காட்டைச்
சிறைப்படுத்தித் தன்னிடத்தில் வைத்திருந்த
சிரிப்பழகி ஹெலனையங்குக் காணக்கூடும்.
மறக்கமுடி யாததிராய் நகரப் போரில்
மடிந்தபெரு மன்னரையும் காணக் கூடும்.

போர்க்களத்தைப் புயலாக்கி மாற்றார் மார்பில்
புதுப்புண்கள் ஏற்படுத்தி, வீரர் நட்ட
வேர்ப்புகழைத் தான்படைத்த பாட்டின் முன்னால்
வெறும்புகழாய் ஆக்கிவைத்த ஹோமர் என்னும்
கார்ப்பருவ மழைமேகக் கவிஞ னோடு
கலந்திருக்க லாமன்றோ ? மேலும் அங்கே
பார்ப்பவரை நான்குறுக்குக் கேள்வி கேட்டால்
பருகுதற்கு நஞ்செனக்குக் கொடுக்க மாட்டார்.

ஊனுடம்பைத் தசைச்சுரங்கக் குருதிக் கால்வாய்
ஓட்டத்தைப் பெற்றிருப்ப தாலே, நானும்
மானிடன்தான் உங்களைப்போல் ! இன்ப துன்ப
மழைவெய்யில் எனக்குமுண்டு! கொடுமைக் கஞ்சிக்
கூனுவதும் செய்யாத குற்றத் தூக்குக்
குலைநடுக்கம் கொள்ளுவதும், நடுவர் உள்ளம்
தானிரங்கக் கண்ணீரால் விண்ணப் பித்துத்
தவிப்பதுவும் என்னிடத்தில் என்றும் இல்லை.

நூறுமுறை சாவதற்குத் தண்டித்தாலும்
நும்முள்ளம் எனையின்று மன்னித்தாலும்
வேறுதொழில் நான்செய்யப் போவதில்லை.
வேங்கையைப்போய் வரிக்கோட்டை மாற்றிக்கொள்ளக்
கூறுகின்றீர் நடைபெறுமா ? உயிரின் மேலாம்
கொள்கையினை நான் துறக்கமாட்டேன்; பாயும்
ஆறுகளும் திசைமாறும் ; ஆனால் இந்த
அறிஞனென்றும் திசைமாறப் போவ தில்லை.

நதிவீதி சந்திக்குமுச் சந்தி ஏறி
நாவீரம் காட்டிப்பல் கூட்டம் கூட்டி
" விதியில்லை ; வெவ்வேறு கடவு ளில்லை ;
விண்ணியலும் மண்ணியலும் அறிதல் வேண்டும்;
அதிகார அரசியல்தான் அற்பர் வீடாம் ;
ஆணவத்தின் மறுபதிப்பே கொடுங்கோல் ஆட்சி;
புதுப்பாதை காட்டுகிறேன் ; அறிவைத் தேடிப்
புறப்படுங்கள் ! " என்றுசொல்லத் தயங்கமாட்டேன்.

தேர்ப்போட்டி நடத்துகிறீர் ; துருத்தி மூக்கில்
திணறுகின்ற நுரைமூச்சு விட்ட வண்ணம்
ஆர்த்துவரும் குதிரைதரும் வெற்றிக் காக
அதையோட்டி வருபவனைப் போற்று கின்றீர்.
தார்க்குச்சி இல்லாமல் உம்மை யெல்லாம்
தன்மானப் பாதைக்குச் செலுத்தும் என்னைத்
தீர்த்துவிட நினைக்கின்றீர், பளிங்குக் கல்லால்
தெருத்தோறும் சிலையெடுத்துப் போற்றிடாமல் !

தீரும்தீர்ப்பு நீதிக்கே அன்றி, நெஞ்சைத்
தடவுகின்ற என்பேச்சுக் காக வேண்டாம்!
நெருங்கிவரும் சாவுக்குத் தப்பி வாழ
நினைப்பதுஎன் நோக்கமன்று; சூழ்ச்சி என்று
தெரிந்திருந்தும் கொடுமைக்குத் தலைவணங்கும்
தீர்ப்புக்கே அஞ்சுகிறேன்; நேர்மைக்காக
எரிநெருப்பில் குளிப்பதற்கும் தயங்கமாட்டேன்!
இறைச்சிக்குக் குழந்தையினைக் கொல்லலாமா?

விண்ணைவிட மிகப்பெரிய போர்வை யில்லை
வெங்கதிரோன் போல்பெரிய விளக்கு மில்லை
என்னுடைய தொண்டைவிடப் பெரிய தொண்டும்
இந்நாட்டில் இனிநிகழப் போவ தில்லை
மண்ணுலகில் என்னறிவை முதலாய் வைத்தே
மதிப்புலமை வளர்ந்தாக வேண்டும்? நீல
விண்மீது விடிவெள்ளி எழுந்த பின்தான்
வெயில்வட்டம் இருள்கிழிக்கும் தலையை நீட்டும்.

கொல்லவந்த நல்லவரே! உங்கட் கொன்று
கூறுகிறேன்; வல்லவர்கள் சாகும் போது
சொல்லுகின்ற சொல்லுக்கு வலிமை யுண்டு;
சுழற்காற்று கட்டாயம் மாறி வீசும்.
கல்லெடுத்து வீசுகிறீர்! எதிர்கா லத்தில்
கட்டாயம் உம்மீது மலையே வீழும்!
நில்லென்று நீர்க்குளத்தில் தள்ளு கின்றீர்;
நெருப்பாற்றில் நீர்மூழ்க வேண்டி நேரும்!

பொழுதுகண்டு மறைகின்ற கதிர வன்போல்
புதைகின்ற கிழவயதை எட்டி விட்டேன்.
அழுதுகொண்டு மற்றவர்போல் செத்தால், என்னை
அறிஞனென்று மதிப்பாரா ? கேள்வி ஏரால்
உழுதுகொண்டு சாகின்றேன் ; என்றும்போல
ஓயாமல் சிந்திக்கச் சொல்லுகின்றேன்.
விழுதிறங்கி என்கொள்கை எதிர்காலத்தில்
விரிவானம் போல்விளங்கக் காண்பீர் நீங்கள் !

இறுதியிலே நானொன்று வேண்டு கின்றேன்;
என்மக்கள் வளர்ந்துவரும் எதிர்கா லத்தில்
முறைதவறி நடந்தாலோ, பண்பை விற்று
முதல்சேர்க்க முனைந்தாலோ, உண்மை யென்னும்
நெறிநிற்க மறுத்தாலோ, சிந்திக் காமல்
நெடுமரமாய் நின்றாலோ, உலகோர் முன்னால்
அறிஞரைப்போல் நடித்தாலோ இரக்க மின்றி
அவர்களையும் நஞ்சூட்டிக் கொல்ல வேண்டும்.

# சூடந்தூக்கும் குங்குமப்பூ

அரும்பாக இருந்த சகுந்தலையின் உள்ளம் துஷ்யந்தனால் அவிழ்மலராகிறது. சிப்பிச் சகுந்தலை தன் முத்து வயிற்றுடன் காதலனைக் காணச் செல்லுகிறாள் ஏற்றுக்கொள்வான் என்ற இன்ப நினைவோடு. அரிய ணைக் காதலன் சூழ்நிலையால் அறியாக் காதலன் ஆகிறான். பௌரவ மன்னனால் கௌரவம் இழந்த அக்காட்டு மலர் வடித்த கண்ணீர்த் தேன் இக்கவிதை.

கைப்பிடித்த காதலரே .. வேண்டாம்! கொண்ட
கடிமணத்தில் தங்களுக்கே ஐய மென்றால்
இப்படிநான் அழைப்பதினிப் பொருத்த மில்லை.
இந்நாட்டுப் பௌரவரே! எனது கற்பைக்
குப்புறத்தள் ளுதல்முறையா? அலகை வெட்டிக்
குறைத்துவிட்டால் கோழிக்கு வாழ்க்கை ஏது?
தப்பேதும் அறியாத என்னை முள்ளில்
தள்ளுகின்றீர்; மானத்தைக் கிள்ளு கின்றீர்.

அணைப்பதற்கும் என்னுடம்பில் மொய்ப்ப தற்கும்
அச்சார மாய்நீங்கள் அன்று தந்த
கணையாழி என்னிடத்தில் இல்லை; இந்தக்
கண்ணிரண்டும் காட்டாத உறவைக் கையில்
புணருகின்ற மோதிரமா காட்டும்? என்றன்
பொன்னுடம்புப் பூட்டுக்கு மேலாய், வேறு
மணமொன்று தேவையுண்டா? வண்டும் பூவும்
மணப்பதில்லை என்றீரே! மறந்தா போனீர்?.

உதடென்றால் பேசுதற்கே என்றும், இந்த
ஒல்லியிடை குடந்தூக்க என்றும், தங்கச்
சதையுடம்பு மரவுரிக்கே என்றும், ஒன்றும்
சரியாக நானறியா நாளில் வந்து
பதமான பருவவயல் உடம்பை நன்கு
பயன்படுத்தக் கற்பித்தீர் ! உங்கள் வாயில்
இதமான பேச்சையெதிர் பார்த்து வந்தேன் ;
எரிநெருப்பை என்செவியில் பாய்ச்ச லாமா ?

நெளிகின்ற புழுப்போல இலைப்ப டுக்கை
நெருப்பில்நான் துடிக்கையிலே, அன்று நீங்கள்
கிளியுடம்புத் தாமரையின் இலையை ஒடிக்
கிள்ளிவந்து வீசிநின்றீர் ; நெருங்கி என்றன்
தளிரடியைப் பிடிப்பதற்கும் துடித்தீர் ! நானோ
தகாதென்று தடுத்துவிட்டேன் ; இன்று நீங்கள்
உளியாக மாறிவிட்டீர் ! என்றன் காதல்
உணர்ச்சிகளைச் செதுக்குதற்குத் துணிந்துவிட்டீர்.

' குடந்தூக்கும் தளிர்க்கொடியே ! எங்கே சொல்லிக்
கொள்ளாமல் ஓடுகின்றாய்? ஊற்றும் தண்ணீர்க்
கடன்தீர்க்க வேண்டுமென்று தோழியர்கள்
கையாலே தடுத்தார்கள் ; என்துன்பத்தை
உடன்தீர்க்க ஓடிவந்தீர் ; நாணத் தாலே
உடம்பெல்லாம் குங்குமப்பூ ஆனேன் ; இன்றோ
படந்தூக்கிக் கடிக்கின்ற நாகத் தைப்போல்
பற்களினைப் பாவையென்முன் நீட்டு கின்றீர்.

புதுப்புன்னை இலைக்காலில் தர்ப்பை குத்திப்
புண்செய்த நேரத்தில், குனிந்த வண்ணம்
மதுக்கண்ணால் புதுப்புண்கள் உங்கள் வெற்றி
மார்பின்மேல் நான்செய்தேன் ; எழில் பிதுங்கக்
குதிகாலில் நானமர்ந்து கொண்டிருந்த
கோலத்தைக் கண்ணாலே தின்றீர் ! பின்னர்
எதிர்க்காற்றில் செல்லுகின்ற கொடியைப் போல
என்பக்கம் பார்த்துக்கொண் டேநடந்தீர்.

கொடிமுல்லை மண்டபத்தில் நீரும் நானும்
கொலுவிருந்தோம் ; அப்போது நான் வளர்த்த,
நெடும்புருவ மானங்கு வந்த தாலே,
நீர்கையில் வைத்திருந்த தொன்னைத் தண்ணீர்
கொடுப்பதற்குக் கூப்பிட்டீர் ; அதுமருண்டு
கோதையெனை நெருங்கியதைக் கண்டு 'சின்ன
இடையழகி ! இளம் இனத்தைச் சேரும் ! நீங்கள்
இருவருமே இக்காட்டு வாசி' என்றீர்.

காலடியால் காதலரை வேவு பார்க்கும்
காமனென்னைக் காய்கின்றான் என்றேன் ; நீரோ
" கோலமயில் உனைக்காயும் காமன், என்னைக்
கொளுத்துகிறான், என்றுரைத்தீர் ; 'இரக்கமின்றி
ஆலங்காய்ச் சந்திரனைப் பகல்அழிக்கும் !
அல்லியினை அடியோடு சிதைப்ப தில்லை ;
வேலோரம் இருக்கின்றாய் பெண்ணே ! நானோ
வேல்முனையில் இருக்கின்றேன்' என்று சொன்னீர்.

' எத்தனைபேர் மார்புக்குள் போய்வந் தாலும்
என்கத்தி உறைக்குள்தான் உறங்கும் ; காதல்
பத்தினிமார் எத்தனைபேர் இருந்தால் என்ன?
பட்டத்துக் குரியவள்நீ ! வீடி ருக்கச்
சத்திரத்தில் நிலையாகத் தங்கு வேனா ?
சஞ்சலமேன் ? என்றதெல்லாம் மறந்தீர் ; காமன்
குத்துக்கள் தைத்ததனால் சிலந்தி நெய்த
கூடானேன் : மீண்டும்நீர் குத்த லாமா ?

தலையிறக்கும் கருவிழுதுக் கூந்தல் என்றன்
தாள்வரையில் தொங்கியதால், வண்ட தைத்தன்
குலமென்று கருதியது ; தொடர்ந்து வந்து
கூடுதற்குத் துரத்தியது ; வண்டு செய்த
சலசலப்பைப் பயன்படுத்தி நினைத்த வற்றைச்
சாதித்துத் திரும்பிவிட்டீர் ; பருவ கால
விளையாட்டின் விளைவாலே கொடியு டம்பு
வீணையுடம் பாகியதால் விரைந்து வந்தேன்.

நிறக்குடும்ப மறைவில்லை எட்டி விட்ட
நினைப்போடு நான்வந்தேன் ; இனிமேல் வானில்
பறப்பதற்கு முடியாமல் சிறகு வெட்டப்
பட்டமயில் ஆகிவிட்டேன் ; நெஞ்சிற் காதல்
திறப்புவிழாச் செய்தவரே ! இனிக்கும் அந்தத்
தேன்நினைவில் நான்சாகத் தயங்க மாட்டேன்.
பிறக்கின்ற என்குழந்தை தன்னை எண்ணிப்
பேதலித்து நிற்கின்றேன் ; மயங்கு கின்றேன்.

வேல்கழுவும் செங்குருதிப் போர்ந டத்தும்
வேந்தரெனத் தோழியர்கள் அறிந்து, தண்ணீர்
கால்கழுவக் கொண்டுவந்தார் ; நீரோ என்னைக்
கைகழுவ நினைக்கின்றீர் ! பன்னீ ராலே
மேல்கழுவும் மன்னவரே ! நிலத்தில் ஏது
மின்னலென்று சொன்னதெல்லாம் பொய்யா? என்றன்
பால்கழுவும் முகக்குழந்தை தன்னை எண்ணிப்
பார்க்காமல் பேசுகின்றீர் ! நியாயந் தானா?

[தனிமையில் நடந்த இனிமை நிகழ்ச்சிகளை ஒவ்வொன்றாக எடுத்துக்கூறி மங்கிய அவன் நெஞ்சத்தில் நினைவுச் சுடரைக் கொளுத்த முயற்சிக்கிறாள் சகுந்தலை. தன் கண்ணீரால் அவன் நெஞ்சைக் கரைக்கப் பார்க்கிறாள். அவள் முயற்சி பாறையில் அடித்த முளையாகி விட்டது. கண்ணீரில் நனைந்த அவள் சொற்களைக் கேட்டு எள்ளி நகையாடுகிறான் துஷ்யந்தன். குயில் பிற பறவைகளை ஏமாற்றி அவற்றின் கூட்டில் தன் குஞ்சுகளை வளர்க்கும். அதுபோல் அவளும் தன் வயிற்றுக் குழந்தையைப் பிறரிடம் விட்டு வளர்க்கப் பார்ப்பதாகக் குத்திப் பேசுகிறான். இதுவரையில் குற்றால அருவியாக இருந்த சகுந்தலை உடனே கொந்தளிக்கும் கடலாக மாறுகிறாள்.]

புல்மூடி யிருக்கின்ற கிணற்றைப் போலப்
பொல்லாத மன்னவனே ! நெருப்பி ரும்புச்
சொல்லாலே சுடுகின்றாய் ! எனது கற்பைச்
சொக்கட்டான் ஆடுகின்றாய் ! நாக்குத் தேனால்
நல்லவன்போல் நடித்துவிட்டு நெஞ்சு நஞ்சை
நடுங்காமல் கொட்டுகின்றாய் ! தெரிந்தி ருந்தால்
எல்லையினை மீறியவள் என்ற சேற்றை
என்மீது பூசிக்கொண் டிருக்க மாட்டேன்.

கடைத்தெருவில் கன்னமிட்ட பொருளை அந்தக்
கள்வனுக்கே பரிசாகக் கொடுப்ப தைப்போல்
சடைத்துறவி என் தந்தை என்னை யிந்தச்
சதிக்கிடங்கிற் கனுப்பிவைத்தார் ; கற்பின்மீது
படையெடுப்பு நடத்துகின்ற மன்னா! உன்றன்
பஞ்சணையும் இனியெனக்குப் பாம்புப் புற்றே!
நடை தடுக்கி விழுந்தாலும், இனியுன் கையில்
நான் தடுக்கி ஒருபோதும் வீழ மாட்டேன்.

கொடிப்பழக்கம் கொண்டவள் நான்; மலர்ச் சிரிப்புக்
கொடியவனுன் பழக்கத்தால் கெட்டேன் ; உன்றன்
மடிப்பழக்கம் என்றென்றும் நிலைக்கும் என்று
மானத்தைப் பறிகொடுத்த மங்கை யானேன்,
குடிப்பழக்கம் கொண்டவர்கள் தெளிந்த பின்பு,
கூறியதை மறப்பார்கள் ; அவர்போல் என்றன்
இடைப்பழக்கம் நடைப்பழக்கம், மதுப்பீ சையும்
இதழ்ப்பழக்கம் எல்லாமே மறந்து போனாய் !

வீக்கத்தைச் சதைவளர்ச்சி என்று நம்பி
வீணானேன் ; அரசாங்க வைரக் கத்தி
தாக்காது காதலியை எனநி னைந்து
தரங்கெட்டேன் ; வித்தாரக் கண்ணி வைக்கும்
வாக்காலே வசமிழந்தேன் ; சிலந்தி யைப்போல்
வாய்ப்பந்தல் போட்டுவிட்டுக் காத்தி ருக்கும்
போக்கிரியால் ஏமாற்றப் பட்டேன் ; வஞ்சப்
பொய்க்குழியில் யானையைப்போல் வீழ்ந்துவிட்டேன்.

பூக்காட்டில் முத்தமிட்டோன் என்னை யின்று
புழுதியிலே தள்ளிவிட்டான் ; கண்வி ழிக்காச்
சாக்காடே ! உன் முத்தம் அணைத்த பேரைச்
சாய்க்கின்ற முத்தந்தான் : ஆனால் நீயோ
காக்கவைத்துக் கயவரைப்போல் தள்ளமாட்டாய் ;
கட்டாயம் மறுக்காமல் ஏற்றுக் கொள்வாய்,
சீக்கிரத்தில் சாவே நீ வா வா ; இந்தச்
சிறுநரிகள் நடுவினிலே வாழமாட்டேன்.

*[சகுந்தலை மயங்கி வீழ்கிறாள்]*

# கண்ணீரில் கரைகின்றேன்

ஒதெல்லோ கருத்த உடலும், கனத்த உதடும் கொண்ட மூரினத்தைச் சார்ந்தவன் ஆனால் அஞ்சாமை மிக்க மலைத்தோள் வீரன். அவன் மனைவி டெஸ்டிமோனா; வெனிசு நாட்டு வெள்ளைமயில்; கிள்ளை மொழிக் காரிகை. வஞ்சகரின் வாய்மொழியைக் கேட்டுப் பிஞ்சு நிலா போன்ற தன் மனைவியின் கற்பில் ஐயம் கொண்டு, அவளைக் கொல்லும் எல்லைக்கே சென்று விடுகிறான் ஒதெல்லோ. பளிங்குச் சிலைபோல் பஞ்சணையில் படுத்துறங்கும் அவளைப் பார்க்கிறான். அப்போது அவன் உள்ளம் பேசுகிறது; உதடும் பேசுகிறது.

மலைப்பனிபோல் நிறத்தவளே; வெனிசில் வாழும்
மானினத்தில் பிறந்தவளே! கிரேக்க நாட்டுக்
கலைக்கோயில் போன்றவளே! வர்ஜில் சொன்ன
காவியமே! ஓவியமே! சிற்பி தந்த
சிலைப்பளிங்கைப் போலிருக்கும் டெஸ்டிமோனா
சிறுகீறல் உன்னுடம்பில் செய்வதற்கும்
மலைக்கின்ற தென்னுள்ளம்; உனது ரத்தம்
மண்மீது சிந்துவதைப் பொறுக்க மாட்டேன்.

நாட்டாட்சி செய்வதற்குப் பிறந்த நானோ
நகைமுத்தே! காலமெல்லாம் இனிக்கும் காதற்
கூட்டாட்சி உன்னோடு நடத்துதற்குக்
கொண்டிருந்தேன் பேராசை! அதனை இன்று
வேட்டுவைத்துத் தகர்த்துவிட்டாய்; உன்னுடம்பை
வேட்டைக்கா டாக்கிவிட்டாய்; பஞ்சணைப் போர்ப்
பாட்டரசி! பண்பாட்டை விற்று விட்டுப்
பரத்தைநிலைக் கிறங்கிவிட்டாய்! பழிசெய்திட்டாய்

சுண்ணாம்பை வெண்ணெயென்று நம்பி விட்டேன்
கள்ளானைத் தும்பியென்(று) ஏமாந்து விட்டேன்
வெண்மையென்ற காரணத்தால் கூழாங் கல்லை
விலையுயர்ந்த முத்தென்று மோசம் போனேன்
கண்ணாடித் துண்டத்தை வைரம் என்றேன்
கழிநீரைத் தேனென்றேன் : கனிச்சா றென்றேன்.
பண்ணென்றேன் கொட்டாவி தன்னை ; உன்னைப்
பத்தினியென் றிதுவரையில் எண்ணிவிட்டேன்.

கானகத்து வெண்மயிலே ! மேனி யில்பூக்
கண்காட்சி நடத்துகின்ற வண்ணப் பெண்ணே !
தேனிலவே ! வானவில்லின் மகளே ! மானே !
தித்திப்பின் விளைநிலமே ! இயற்கை உன்பால்
வானுயர்ந்த பேரழகை வாரி வைத்தும்
வட்டநிலா வைமுகமாய் ஒட்ட வைத்தும்
மேனியெங்கும் தேனெடுத்துப் பூசி வைத்தும்
மேலான கற்பினையேன் வைக்க வில்லை ?

நஞ்சிருக்கும் நாகத்தின் அழகும், உன்றன்
நளினமலர்ப் பெண்ணழகும் ஒன்றே; உன்னை
வஞ்சத்தின் கலையுருவம் என்பேன்; வைர
வாளென்பேன்; வளர்ந்துவரும் உனது குற்றம்
பிஞ்சாக இருக்கையிலே உன்றன் ஆவி
பிரித்துவிடத் தடிக்கின்றேன்; இல்லா விட்டால்
கொஞ்சுமொழித் தூண்டிலினை எடுத்து வீசிக்
குவலயத்தை யேகெடுக்கத் தயங்க மாட்டாய்.

பணப்பெட்டி திறந்துவைத்தாற் போன்று தோன்றும்
பண்புள்ள விண்மீன்காள்! இவள் இழைத்த
குணக்கேட்டை உம்மிடத்தில் எடுத்துக் கூறக்
கூசுகின்றேன். வெண்ணிலவே! விண்ணில் தோன்றும்
மணப்பெண்ணே! கற்புநிலை மாறி டாமல்
மாணிக்கப் பரிதியினைச் சுற்றும் பெண்ணே!
இணைத்திருந்த என்கையை நழுவ விட்டே
இன்னொருவன் பின்னிவளும் சென்று விட்டாள்.

துணையோடு நானுறங்கும் இராக்கா லத்தில்
தூங்காமல் நின்றெரியும் விளக்கே! உன்னை
அணைத்துவிட்டால் ஏற்றுதற்கு முடியும். ஆனால்
அழகேறி ஆட்சிசெய்யும் இவளு டம்பில்
இணைந்திருக்கும் உயிர்விளக்கை அணைத்துவிட்டால்
ஏற்றுதற்கு முடியாது மீண்டும்; வைரக்
கணையாழி போலிருந்த இவளோ, இன்று
கைநழுவிக் குப்பையிலே வீழ்ந்து விட்டாள்.

குருதியைப்போல் மலர்கின்ற பூவே! உன்னைக்
கொடியினின்றும் பிரித்துவிட்டால் அன்றே வாடிச்
சருகாகிப் போகின்றாய்; உன்றன் வாழ்க்கைச்
சரித்திரமும் முடிந்துவிடும்; உன்னைப் போல்என்
அருகிருக்கும் அழகரசி இறந்த பின்னால்
அவளின்பம் எனக்கில்லை; ஆத லாலே
மெருகிருக்கும் அவள்பளிங்குக் கன்ன மேட்டில்
மெல்லுதட்டில் கடைசிமுத்தம் விதைக்கின் றேன்நான்.

சீசரைப்போல் வாழ்ந்தென்ன? உலகை வென்ற
சிகந்தரைப்போல் படைவீரம் காட்டி யென்ன?
காசுமலை மேலேறிப் பார சீகக்
காவலர்போல் இருந்தென்ன? ஹோம ரைப்போல்
ஆசுகவி ஆயிரந்தான் அடுக்கி யென்ன?
அத்தனையும் தான்மணந்த பெண்ணொ ருத்தி
மாசுடையாள் என்றொருசொல் தோன்று மாயின்
மணல்வீட்டைப் போல்நொடியில் சரிந்து போகும்!

பண்ணுதிர்க்கும் கின்னரமே! என்னு டம்பில்
பட்டைப்போல் ஒட்டிக்கொண் டிருந்த பெண்ணே!
கண்ணீரில் கரைகின்றேன்; நயம் குறைந்த
கவிதையைப்போல் நான்விரைவில் சாவேன்; உன்றன்
எண்ணத்தால் ஏக்கத்தால் கறையான் பற்றி
இற்றுதிரும் மரத்தைப்போல் அழிந்து போவேன்
பெண்ணாலே பெருமையெலாம் இழந்து வீழ்ந்த
பெருவீரன் ஆண்டனிபோல் நானும் வீழ்வேன்

# தொட்டில் துரைத்தனம்.

இராபர்ட் கிரீன் இங்கர்சால் பெரிய நாத்திகர்; அமெரிக்க நாட்டுச் சொல்லேருழவர்; எதிர்க்க முடியாத தன் ஏவுகணைப் பேச்சால் ஆத்திகக் கோட்டையின் கடைக்காலில் அதிர்ச்சி உண்டாக்கியவர். சமயவாதிகள் இவரைச் சைத்தான் என்றனர். பகுத்தறிவுவாதிகள் இவரைப் பகலவன் என்றனர். மேடையில் பேசிய ஒவ்வொரு சொல்லுக்கும் ஓர் அமெரிக்க டாலர் பெற்ற இவர், அமெரிக்க நாட்டு மக்கட் தலைவரைவிட அதிக வருவாயோடு வாழ்ந்தார். பெண்ணுரிமைபற்றி இங்கர்சால் பேசிய பேச்சே இது.

கொக்கிப் பிறைநிலா, குடுமி மலையில்
சிக்கிப் பறக்கும் சேலை அருவிகள்,
மேனிப் பட்டு மான்கள், சிதறிய
வானவில் துண்டு வண்ணத்துப் பூச்சிகள்,
குன்றப் பெருந்தலைக் கொப்புளக் கதிரவன்,
அன்றலர் பூக்கள் ஆகிய வற்றைப்
படைத்துப் படைத்துப் பழகிய கைகளால்
இயற்கை முடித்த ஈடிலாப் பெண்கள்,
மடமை கடவுள் மதம்இவை கட்கே
அடிமைப் பட்ட ஆடவர்க் கடிமைகள் !

மக்கட் சாதியில் மதிப்பும் தூய்மையும்
மிக்க நிகழ்ச்சி திருமணம் ஒன்றுதான்.
திருமணம் என்னும் மோதிரப் புணர்ச்சியை
வெறுக்கும் தாடிக் குருக்களைக், கூந்தலை
நறுக்கும் கோயிற் பெண்களை வெறுக்கிறேன்.

நமையின்று உயர்த்தும் நாக ரீகம்
சமையல் அடுப்புகள் சாதித்த வெற்றியே.
குடும்பம் என்பது குட்டி அரசியல்!
படுக்கை அரசியல் சிறந்தால், நாட்டில்
நடக்கும் அரசியல் நலிவு படாது!

ஒருவர் மேனியில் ஒருவர் ஒதுங்கியும்
இருவர் கைக்குள் இருவரும் அடங்கியும்
கொடுத்த இன்பத்தைக் கூசாது பெற்றும்
அன்புபரி மாறியும் துன்பத்தைப் பகிர்ந்தும்
வாழும் இல்லற வாழ்க்கை ஒன்றுதான்
பெண்ணும் ஆணும் பெறும்பே ரின்பம்!
காதலும் திருமணக் கலப்புமில் லாமல்
ஏதிவ் வுலக வாழ்க்கையில் வெற்றி?
வேல்வாள் வெற்றி வேய்ந்த விதானத்தில்
அரசுவீற் றிருக்கும் அரியணை வாழ்க்கை
விரும்புமோர் பெண்ணின் கரும்பு நெஞ்சில்
இருந்தர சாளும் இன்பத்திற் கீடோ?
பிச்சை எடுப்பினும் பிணியால் நலிந்தே
எச்சிற் சாக்கடை அருகில் இருப்பினும்
பண்புடைப் பாவை ஒருத்தியின் காதலை
வென்றவன் உண்மையில் வாழ்க்கையில் வென்றவன்!

மண்ணைப் படைத்த ஆண்டவன், ஆணைப்
பெண்ணைப் படைத்த பெருங்கதை அறிவீர்.
நெளியும் மண்புழு விற்கும், நானிங்கு
மொழியும் கதைக்கும் முதுகெலும் பில்லை.
எந்த மதமும், உலகில் துன்பம்
வந்தது பெண்ணால் என்றே கூறும்.
இந்தக் கதையும் அந்தக் கருத்தை
முன்னால் நிறுத்தி முரசடிக் கின்றது.

பசுமயிர்த் தாவர மண்டைமண் ணுலகின்மேல்
விசும்புப் போர்வையை வீசிய இறைவன்,
ஆவிக் காற்றை அனுப்பினான்; நிலத்தைக்
காயப் படுத்திக் கடலாய் ஆக்கினான்..
கண்பகை யான இருட்டை விரட்ட
விண்ணில் செங்கதிர் விளக்கையும் ஏற்றினான்.
ஓடும் ஆற்றை மேனி மண் உடம்பில்
நாடித் துடிப்பாய் நடத்தினான்; கொத்தாய்ச்
சுவைச்சுளை முட்டை கிளைகளில் வைக்கும்
கருக்கொண்ட மரங்களின் முகத்தி லிருந்து
சிரிப்பு மலர்களைச் சிந்தச் செய்தான்.
வெடித்துக் கிளம்பும் விதைபோல், சிறகை
அடித்துக் கிளம்பும் பறவையைப் படைத்தான்.
மேயும் அழகெனும் விலங்கினம் படைத்தான்.

இப்படிப் பலவும் இயற்றிக் கடைசியில்
நிழற்பாய் விரித்து நிற்கும் மரங்கள்
அடர்ந்தவோர் சோலையில் ஆடவன் ஒருவனைத்
தனிமையிற் படைத்துத் தவிக்க விட்டான்.
உண்ணக் கனியும் ஊற்று நீரும்
அண்டையில் இருந்தும் அத்தனி மனிதன்
வண்டிக் காகக் காத்திருப் பவன்போல்
எதையோ எண்ணி எதிர்பார்த் திருந்தான்.

ஓய்ந்த நெஞ்சில் உணர்ச்சியைக் கிளரச்
செய்தித் தாளோ சிறுகதைத் தொகுதியோ
கட்சிச் சண்டையோ கருத்துச் சண்டையோ
ஊரார் வம்போ உள்நாட்டுப் போரோ
இல்லா தொழிந்ததால் இதயஞ் சலித்தான்.
தனிமையைப் போக்கக் கருதிய ஆண்டவன்
புள்ளிமான் படைத்த கைகளால், பெண்ணெனும்

புள்ளியில் லாத மானையும் படைத்துச்
சக்கை வாழ்க்கையைச் சாறுள்ள தாக்கினான்.
ஓட்டை மூங்கில் வாழ்க்கை, இன்னிசை
ஒழுகும் புல்லாங் குழலா கியது.
கொழுமுனை கிழிக்கா வெறும்நில வாழ்க்கை
வளமான சேற்று வயலாகியது.
புதுப்புதுப் போதுகள் விரியக் கண்டு
மதுமலர் வாழ்க்கையை வண்டுகள் தொடங்கின.
கலைமான் பிணையைக் கண்டு கனைத்தது.

கள்ளை வாழ்க்கையில் காட்டிய ஆண்டவன்
எல்லைக் கோட்டையும் அவர்களுக் கமைத்தான்.
இழுக்க இழுக்க ஏவும் கணைகள்
எதிர்த்திசை நோக்கித் தாவுதல் போல
இறைவன் தடுத்த வேலையை, அப்பெண்
மறைவாய்ச் செய்தாள்; மண்ணில் உடனே
மொக்குள் அம்மையும், நாய்போல் குரைக்கும்
கக்குவானும் காய்ச்சலும் தோன்றின;
பலவலி வந்தது; பட்டால் தைக்கும்
முள்ளைப் பெற்று முளைத்தது ரோசா:
வளைந்து செல்லும் வழக்கப் பாம்புகள்
நச்சுப் பற்களால் நடுங்க வைத்தன;
சண்டை அரசியல், சமயம் தோன்றித்
துண்டுதுண் டாக உடைந்தது மானிடம்.
இத்த னைக்கும் ஈவா என்னும்
முத்து மாலையே காரணம் என்று
சமயக் கணக்கர் சாதிக் கின்றனர்.
இருப்பினும் ஆண்டவன் இருந்து பேரின்பம்
பெருக்கும் வீட்டுவான் உலகைக் காட்டிலும்
மண்ணுல கத்தைப் பொன்னுல காக்கும்
பெண்ணுல கத்தையே பெரிதும் விரும்புவேன்.

பெண்ணும் ஆணும் முகத்து விளக்குக்
கண்ணைப் போன்றவர் ; வலக்கண் மற்றொரு
கண்ணைக் கேவல மாகக் கருதுமோ ?
ஆண்டவன் பெண்ணை அடக்க நினைக்கிறான்;
தந்தை என்ற பெயரை மறந்து
தலைவன் என்று தருக்கொடு நிற்கிறான் :
எடுத்துக் காலை இல்லத்தில் வைத்ததும்
மடக்கொடி நங்கையும் மக்களும் தோன்றி
எதிர்கொள வேண்டும் ; மண்டியிட் டமர்ந்து
காலின் செருப்பைக் களைய வேண்டும் ;
ஆட்டும் அவன்கைச் சுட்டு விரற்குப்
பாட்டுப் பாடி நடிக்கவும் வேண்டும்.

வாணாள் அடிமையாய் வந்து பிறந்தும்
அடுக்களைப் பட்டடையில் அடங்கிக் கிடந்தும்
கறையிலா மேனிக் கட்டுடல், பிள்ளைகள்
பெறுவதால் தேய்ந்து பிறைநிலா வாகியும்,
பண்ணிசை பேசியும், படுக்கைக் கணவன்
கண்ணசை விற்குக் காத்துக் கிடந்தும்
வாழும் பெண்கள் வரலாறு துன்பமே.

குணமெனும் குன்றில் இருந்து வாழ்வைப்
பனிமலர்ச் சோலையாய் மாற்றும் பெண்கள்
பணம் அடை காக்கும் பழக்கம் கொண்ட
கணவன் முன்கை யேந்திநிற் கின்றனர்.
கற்பைக் காதலைக் கடமையை நம்பித்
தன்னையே தந்த கணவன், பெட்டியின்
முன்னால் மனைவியை நம்ப மறுக்கிறான்.

பொருளைப் பற்றிநான் கருதுவது இதுதான்!
மெச்சத் தகுந்த மன்னனாய் வாழ்ந்து
பிச்சைக் காரனாய்ச் செலவுசெய் வதைவிட,
பிச்சைக் காரனாக வாழ்ந்து
பெற்ற கடைசிக் காசையும், ஆளும்
மன்னனைப் போலச் செலவு செய்து
வாழும் பெருமித வாழ்வே சிறந்தது.

ஒருநாள் மாலை உருண்டைக் கதிரவன்
மேற்குவான் வெள்ளத்தில் மிதந்துகொண் டிருந்தான்.
நின்ற ஆல்ப்சின் நெடுமையைப் போரில்
வென்றதன் புகழால் குறைத்த வீரன்
நெப்போ லியன்கல் லறைக்கு முன்னால்
நின்றுகொண் டிருந்தேன். அக்கல் லறையோ,
வண்ணப் பளிங்கை வளைத்துக் கட்டிப்
பொன்னால் முடித்த புதுமையை உடையது.
நின்ற என்றன் நெஞ்சத் திரையில்
வென்ற அவன்போர் வெற்றிகள் விழுந்தன.

சின்ன வயதில் சீன்நதிக் கரையில்
தன்னுயிர் முடிக்கச் சென்றஅவ் விளைஞன்
பாரீசு நகர வீதியில், கிளம்பிய
ஆரவா ரத்தை அடக்கக் கண்டேன்;
பனிமலை அவனுக்குப் பணிவதைக் கண்டேன்;
இரும்புக் கோட்டைகள் அவனுக்கு முன்னால்
எறும்புப் புற்றுபோல் இடியக் கண்டேன்;
எதிரிலாப் பெரும்பே ரரசுகள் அவனது
குதிரைக் குளம்பில் மிதிபடக் கண்டேன்;
பன்னீர் மனைவி பதைப்புறு காதலைக்
கண்ணீரில் எழுதிக் காட்டிய போதும்

ஆட்சி வெறியால் அதைமதிக் காத
காட்சியை அவனிடம் கண்டு கலங்கினேன் ;
பனிப்புயல் வீசும் உருசிய நாட்டில்
படையுடன் சென்று மீளுங் காலை
இலையுதிர் மரம்போல் எல்லாம் இழந்து
பழியைச் சுமந்தவன் நிற்பது கண்டேன் ;
வளையாப் பெரும்புகழ் வாட்டர் லூரவில்
வளையக் கண்டேன் ; கூட்டுப் புலிபோல்
கடலுக்கு நடுவில் சிறைப்படக் கண்டேன்.

பின்னால் கட்டிய கையும், சரிந்து
முன்னால் நிற்கும் முரசு வயிறும்
கண்களை விட்டு நீங்க மறுத்தன.
எத்தனை போர்கள் ! எத்தனை கொலைகள் !
எத்தனை பஞ்சணை இவன்கை வாளால்

முத்த மிழந்து முட்புதர் ஆயின !
எத்தனை குழந்தைகள் ஏந்துவா ரின்றிக்
கத்திக் கத்தித் தொண்டை வறண்டன !
இன்பம் ஒருவன் எய்துவ தற்குப்
பேரும் புகழும் பெருமித வாழ்வும்
சீரும் சிறப்பும் தேவையே இல்லை,
மக்களைக் கொன்று மலைபோல் குவித்துக்
கொக்கரித் தெழுந்து, குருதி யாற்றைக்
கத்தித் துடுப்பால் கடந்து வந்து
அரியணை ஏறிய நெப்போ லியனாய்
ஆவதைக் காட்டிலும், பிரெஞ்சு நாட்டில்

நிலத்தைக் கீறி வயிற்றை நிரப்பும்
கலப்பை உழவனாய்க் குடிசையில் பிறந்து,
கட்டைச் செருப்பைக் காலில் அணிந்து,
கருவிழி போலக் கனிந்து மிகச்சுவை
தருகின்ற திராட்சைக் கொடிப்பந்த லின்கீழ்த்
தையல் புரியுமென் தையலோ டமர்ந்து,
தோளில் குழந்தைகள் ஏறி மிதிக்க
வாழும் எளிய வாழ்வையே விரும்புவேன்.

உண்மையாய் விரும்பும் உன்றன் மனைவி
காலக் கொடியவன் கைகளில் சிக்கிக்
கோலம் சிதைந்து குன்றுவதில்லை.
சிலைப்பளிங் கைப்போல் இருக்கும் அவளுடல்
அலைச்சுருக் கத்தால் தளருவ தில்லை.
திரையெழுந் தாடும் கருநிறக் கூந்தல்
நுரைநரை யாகி விழுவது மில்லை !
நாட்டியக் கால்கள் நடுங்குவ தில்லை.
அவளும் அவ்வாறே தான்பெற்ற கணவனை
மணந்தநன் னாளில், மயக்கும் விழியுடன்
சதுக்கம் போன்ற சதைச்சுவை மார்புடன்
தண்ட வாளத் தடந்தோட் கையுடன்
கண்டது போல என்றும் காணுவாள்.

வாழ்க்கையில் அந்தி வந்த காலத்தும்
பேசும் சிட்டுப் பேரக் குழந்தைகள்
தாவிக் குதித்துத் தழுவும் போது,
கிழமர மாகிக் கிடப்பவர் மீண்டும்
இளமர மாகி இன்பம் தளிர்ப்பர் !

காதல் என்பது காலத்தை வென்றது!
பரந்தஇப் பெருங்கடல் வாழ்க்கையில், பணமெனும்
தெப்பக் கனவு காணும் செல்வனோ
அப்பக் கனவு காணும் வறிஞனோ,
யாரா யிருப்பினும் அவன்தன் மனைவியை
மாறா அன்புடன் மலர்போல் மதித்தால்,
அம்மலர் மங்கை வாழ்க்கையில்
நன்மணம் பரப்புவாள்; நல்குவாள் இன்பமே!

# அணிவகுப்பு ஓய்ந்தது

*இந்திய நாட்டு வானம்பாடி என்றும், கவிக்குயில் என்றும் பாராட்டப் பெற்றவர் திருமதி சரோஜினி நாயுடு. அவர் காந்தியடிகளைப் பார்த்து, 'என் அன்புள்ள சுண்டெலியே!' என்று அழைக்கும் அன்புரிமை பெற்றவர். ஆங்கிலப் பேரரசின் கூரிய நகப் பிடியிலிருந்து இந்தியத் துணைக் கண்டம் விடுதலை பெற்ற அந்நன்னாளில், உலகத் தார்காதில் விழும்படி வானொலியின் மூலம் அக்குயில் தன் இன்ப வெள்ளத்தைப் பாய்ச்சியது. அக்கூவல் வரிவடிவம் பெற்றுக் கவிதையாக உங்கள் கண்முன் காட்சியளிக்கிறது.*

அடிமை விலங்கை அறுத்த இந்தியக்
குடிகளின் சார்பில் கூவும் குயில்நான் !
பண்டைநாள் தொட்டுப் பரிதி விளக்கை
மண்டிலம் சுற்றும் மண்ணுல கத்தில்
சுதந்தரக் கனியைச் சுவைத்திடும் மக்களே !
சுதந்தரம் கெட்டுத் துயர்ப்படும் மக்களே !
உங்களுக் கென்றன் வாழ்த்தும் வருத்தமும் !

இளையவர் முதியவர் ஏழையர் செல்வர்
வளையல் வனிதையர், வழங்கக் குறையாத
கல்வியைக் கற்றவர், கல்லாத மற்றவர்,
வல்லவர், நோயால் வாடும் உடம்பினர்,
தீண்டத் தகாதவர் யாவரும் ஒன்றாய்
அரிதின் முயன்று குருதிசிந் தாமல்
பெற்றஇச் சுதந்தரம் பெரும்பே ரிலக்கியம் !

இப்பெரும் போரை ஏற்று நடத்திய
ஒப்பருந் தலைவன் ஒருடைப் பக்கிரி !
வேல்கைக் கொண்டவன் அல்லன் ; மெலிந்த
கோல்கைக் கொண்டவன் ; குமுறிக் கிளம்பும்
குண்டுப் போருக் குரியவன் அல்லன் ;
தொண்டுப் போருக் குரியவன் ; கொல்லும்
கத்தியைக் கையில் ஏந்த மறுத்துச்
சத்தியம் ஏந்திச் சாதிக்க வந்தவன் !
உண்ணா விரதமும் தன்னல மறுப்பும்
அண்ணலின் பெரும்படை அணி வகுப்புகள் !

அணிவகுப் போய்ந்தது ; அவன் தந்த வெற்றிக்
கனிக்குலை இந்தியர் கரங்களில் உள்ளது.
பலாப்பழம் போன்ற பருத்ததோள் மறவர்
விழாத்தரு கின்றனர் ; வெற்றிக் களிப்பில்
கன்னியர் தங்கள் கன்ன மேடையில்
புன்னகை யென்னும் புதுவிளக் கெடுத்தனர் ;
வண்ணக் கொடிகள் வாங்கிய சுதந்தர
விண்ணில் சிறகை விரித்துப் பறந்தன.

வெற்றித் திருநாள் வேளையில், அந்த
வெற்றியைத் தந்த வீரத் தளபதி
நற்றவன் காந்தி நாயகன் எங்கே ?
எங்கோ நாட்டின் எல்லையில், இனவெறிச்
செங்களம் படர்ந்த சிற்றூர்ப் பாதையில்
அழும்கண் ணீருக்கு அணைபோடு கின்றான்.

செழித்தஇவ் விந்திய மண்ணில், அவனடி
அழுத்திய சுவடுகள் அழியாச் சுவடுகள் !
அலையேறிப் பாயும் கங்கையைப் போல
நிலைபேறு கொண்ட தொண்டவன் தொண்டு !
இனிப்பல நூற்றாண் டேகிய பின்னர்
அருளறம் என்னும் அடிப்படை மீதில்
எழுமுயர் நாக ரிகத்திற் கின்றே
கடைக்கா லிட்ட காந்தித் தலைவனை
நாவாரப் போற்றி நன்றி செலுத்துவோம்.

இந்திய நாட்டின் விடுதலைக் காக
இந்திய ரோடு, வேற்றுநா டிருந்து
வந்தவர் பற்பலர் தந்தஒத் துழைப்பை
எண்ணி நன்றியால் இருகை குவிக்கிறோம்.
எகிப்தியர் சுமேரியர் எனப்பல் இனத்தார்
வகுத்தபண் பாட்டு வளர்ச்சியை இந்தியர்
எட்டிப் பிடித்தனர் என்றபே ருண்மையைப்
புதைபொருள் அகழ்ந்தும் ஆய்வுகள் நடத்தியும்
இருண்டஇந் நாட்டு வரலாற் றேட்டில்
பேரொளி பாய்ச்சிய மேலைநாட் டறிஞர்எம்
பாராட்டுக் குரியவர் ; பாராட்டு கின்றோம்.

நெடுந்தொலை நாட்டில் இருந்திங்கு வந்துநாம்
படுந்துயர் வறுமை பலவும் பகிர்ந்தும்,
பட்டி தொட்டியில் பள்ளிகள் அமைத்தும்,
வருந்துவோர்க் கெல்லாம் மருந்தகம் தந்தும்,
திருச்சபை நடத்திய கிறித்தவத் தொண்டரை
வாழ்த்தி வணங்கி வரவேற் கின்றோம்.
பெற்றஇந் நாட்டின் விடுதலைக் காக
மற்றநாட் டெல்லையில் மறைந்து திரிந்தும்,
நாடு கடத்தப் பட்டும், சொல்லரும்
பாடுகள் சுமந்தும், கைம்மாறு கருதாமல்
இன்னுயிர் வழங்கிய முன்னோடி களுக்குக்
கண்ணீர் மாலை கட்டிப் படைக்கிறோம்.

ஆதிக்க வெறிகொண்ட ஆங்கிலச் சக்கரப்
பற்களாய்ப் பகைவராய்ப் பலபேர் இருப்பினும்,
இந்திய மக்கள் எழுப்பிய குரலுக்கு
வாழ்த்துக் கூறிய ஆங்கில நண்பரும்
இல்லாமல் இல்லை ; அவர்க்கும் நன்றி.
பூதப் பசிகொண்ட ஆங்கில அரசின்
யூத அமைச்சன் டிஸ்ரேலி என்பவன்
வீர அரசி விக்டோரி யாவுக்குப்
பேரர சொன்றைப் படைத்துக் கொடுத்தான்.

அந்த அரசியின் சொந்தப் பேரன்
மதிப்பிற் குரிய மவுண்ட்பேட்டன் துரைமகன்.
பேரனே பாட்டியின் பேரர சுடையக்
காரணம் ஆயினன் ! இந்தியர் மகிழ்ச்சிக்கு
வேறென்ன வேண்டும் ? விளைந்தஇவ் வெற்றி

கற்பனைச் சுவையும் கவிதை இனிமையும்
பெற்றதென் றெண்ணிப் பேசத் தகுந்தது.

நினைவில் புகழை நிறுத்தும் நாங்கள்
கனவில் கனவு கண்டவர் ; என்றும்
வரும்பொருள் உணர்த்தும் வல்லமைபெற்ற
பெரும்பெரும் ஞானியைப் பெற்றுச் சிறந்தவர்.
அறமும் பொருளும் இன்பமும் உணர்ந்து
துறவும் கற்றவர் ; தோல்வியே காணா
மறவர் குலத்தை மண்ணுக் களித்தவர்.
கொழுந்துவிட் டெரிந்த கொடுமை நெருப்பில்
அழுந்திப் புடமிட்ட ஆடகப் பொன்போல்
எழுந்து வந்த இளங்கதிர் மக்கள்.

உலகம் என்னுமிவ் வோசைப் பந்தில்
வளரும் மானிடச் சாதிகள் வளர்த்த
கலைப்போர், சிந்தனைக் கருத்துக் களப்போர்
அலைப்பண் பாட்டின் ஆக்கப் போர்எனப்
பலப்பல வாகப் பல்கிய போர்களின்
வீரவட்டத்தில் ஆர்வ நெஞ்சுடன்
பாய்ந்து வந்த பருத்ததோள் மறவர்கள்.
செழித்தபண் பாடும் இலக்கியச் சிறப்பும்
பழித்தல் இல்லாப் பழம்பெரும் புகழும்
கொண்டவர் நாங்கள் ! எங்கள் இல்லமோ
கருங்கடற் சுவர்களும், கால்மிதிக் கா
பெரும்பனிக் கூரையும் பெற்றுச் சிறந்தது :
தருவிருந் தோம்பி வருவிருந் துக்குத்
திறந்து கிடக்கும் திருவாயில் கொண்டது.

விடுதலைப் போரில் வென்ற நாங்கள்
இமையக் கூரையில் ஏறி, இந்நாள்
அமைதிப் போருக்கு அறைகூவுகின்றோம்.
உடைந்தஇவ் வுலகை ஒன்றாக்கு தற்குப்
படையமைக் கின்றோம். பண்டைநாள் தொட்டுப்
பொருளறம் ஞானம் புகட்டிய நாங்கள்
அருளறப் போர்க்குக் கொடியெடுக் கின்றோம்.
கொலைப்போர் உலகை ஒழித்தே, அமைதியை
அழைப்போர் எங்கள் அணியில் சேரலாம்.
இறந்தகா லத்தும் எதிர்கா லத்தும்
இறவாத் தன்மைய தெங்கள் சுதந்தரம்.
பெற்றஇச் சுதந்தரக் குறிக்கோள்
மற்றவர் வாழ நாம்வாழ் வதுவே !

# எச்சிலிலை நாகரிகம்

அமெரிக்கப் பாராளு மன்றத்தில் 1964-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19-ஆம் நாள் குடியுரிமை மசோதா (Civil Rights Bill) சட்டமாக நிறைவேற்றப்பட்டுவிட்டது. இச் சட்டம் உருப்பெறுவதற்கு அடிப்படைக் காரணமாக விளங்கியவர் மறைந்த மாவீரர் ஜான் எஃப் கென்னடி. 1962 ஆம் ஆண்டு நிறவெறியை எதிர்த்து வானொலியில் ஒரு சொற்பொழிவாற்றினார் அவர். அச்சொற் பொழிவின் கவிதை யுருவமே இது.

தூணொன்று சரிந்துவிட்டால் விண்ணை முட்டும்
தூயமணி மாளிகையே சரிந்து போகும்
ஆணவத்தால் தனியொருவன் உரிமை தன்னை
அழிக்குங்கால் நாட்டுரிமை அழிந்து போகும்
வீண்பெருமை பேசுகிறீர் ; ஓரி னத்தை
வேதனையில் தள்ளுகிறீர் ; கறுப்பர் என்று
நாணமின்றிப் பேசுகின்றீர் ; தலையும் தோளும்
நடமாடும் கால்களினை இகழ்தல் போலே.

பன்னாட்டார் இந்நாட்டைத் தேடி வந்தோம்
பழமரத்தைத் தேடிவரும் பறவை போல.
தன்னாட்சிப் போர்செய்தோம்; அடிமை வாழ்வைத்
தகர்த்தெறிந்தோம்; எல்லாரும் இந்த மண்ணில்
பொன்னாட்டை உருவாக்கப் பாடு பட்டோம்.
புகுந்தவர்கள் பிறப்பாலே ஒப்பர் என்றே
இந்நாட்டில் சட்டங்கள் இயற்றி வைத்தோம்;
இன்றைக்கு நாமதனை மறந்து விட்டோம்.

காற்செருப்பைச் சாக்கடையில் தள்ளு தல்போல்
கடையரென்று தள்ளுகிறீர் ஓர் கூட்டத்தை!
மேற்குலத்தார் நீங்களென்று சொல்லு கின்றீர்
மேனியின்தோல் வெளுப்பென்ற காரணத்தால்.
காற்றடித்தால் இமைமூடும் கண்ணில், வட்டக்
கருவிழியை மட்டமென்று சொல்ல லாமா ?
வேற்கண்ணார் கருமையென்ற கார ணத்தால்
விளையாடும் கூந்தலினை வெறுத்தா விட்டர்?

கடைகளிலும் விலக்கிவைத்தீர்; புனித மான
கல்லூரி வாயிலுக்குள் விலக்கி வைத்தீர் ;
நடைபாதை தனிற்கூட விலக்கி வைத்தீர் ;
நங்கையர்கள் ஏறிநிற்கும் ஆடரங்கில்
படக்காட்சிக் கொட்டகையில் விலக்கி வைத்தீர் ;
பசிக்கொடுமை தாளாமல் நுழையும் போது
விடுதிகளில் விலக்கிவைத்தீர் ; மக்கட் பண்பை
விலைகூறி விற்பதற்குத் துணிந்து விட்டீர் !

ஒட்டகத்தைப் போல் முகத்தான், சுதந்த ரத்தின்
உயரத்தைக் காட்டுதற்கு நமது நாட்டில்
கட்டிவைத்த சிலையைப்போல் உயர்ந்திருந்தோன்.
கண்ணீர்க்குத் துணைநின்ற கருணை லிங்கன்
பட்டாளத் துணையுடனே இந்த நாட்டில்
பஞ்சைகள் மேல் படர்ந்திருந்த அடிமை வேரை
வெட்டிவிட்டான் ; ஆனாலும் அவர்கள் வாழ்வில்
வேதனைதான் அடியோடு தீர வில்லை,

எங்கெங்கு மேடையுண்டோ, நாம்வி டுக்கும்
ஏவுகணை எதுவரைக்கும் பாய்வதுண்டோ,
அங்கெல்லாம் சுதந்தரத்தின் பெருமை பற்றி
அழகாகப் பேசுகிறோம் ; ஆனால் நாமோ
இங்கிருக்கும் நீக்ரோவர் சுதந்த ரத்தை
எச்சிலிலை ஆக்குகிறோம் ; நிலவெ றிக்கும்
திங்கட்பெண் வானத்தில் சோரம் போனால்
தெரியாமல் போய்விடுமா உலகத் தார்க்கே ?

எம்முறையில் பிறர்நம்மை மதிக்க வேண்டும்
என்றேநாம் இந்நாட்டில் நினைக்கின் றோமோ.
எம்முறையில் நம்மக்கள் கல்வி கற்றே
ஏற்றங்கள் பெறுவதற்கு நினைக்கின் றோமோ.
அம்முறையில் நீக்ரோவர் வாழ்வ தற்கே
அனைத்தையும்நாம் செயல்வேண்டும்; இல்லாவிட்டால்
நம்மையினி உலகத்தார் மதிக்க மாட்டார் ;
நாகரிகர் என்றினிமேல் சொல்ல மாட்டார்.

கதிரின்றி விண்ணுக்குப் பெருமை யில்லை
கற்பனையின் சிறப்பின்றிக் கவிதை யில்லை
முதிராத புலமைக்கு வரவேற் பில்லை
முட்டாளின் ஆட்சியிலே வளர்ச்சி யில்லை
அதிகாரம் இல்லாத ஆட்சி யாளன்
அரியணையில் வீற்றிருந்தும் பயனே இல்லை
மதிப்பென்ன பெற்றிருந்தும் பொதுமை எண்ணம்
மலராமல் சிறப்பதில்லை மக்களாட்சி.

ஊராரின் எண்ணத்தைச் சுமந்து வந்தோர்
உறுப்பினராய் ஒன்றாக அமர்ந்தி ருக்கும்
பாராளு மன்றத்தில் என்க ருத்தைப்
பறைசாற்றி நிறத்திமிரை இந்த நாட்டில்
வேரோடு களைவதற்குச் சட்டம் செய்வேன் :
விரைவாகச் செயற்படுவேன், ஒன்றாய்க்கூடி
ஆர்வந்து தடுத்தாலும் அஞ்ச மாட்டேன்.
அதுவரையில் கண்ணிரண்டும் துஞ்ச மாட்டேன்.

# கூடல் நகர் பெற்ற பாடல்

பேரறிஞர் அண்ணா அவர்கள் மதுரைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் நிகழ்த்திய சொற்பொழிவுக்கு வரலாற்றுச் சிறப்புண்டு. தமிழ்நாட்டில், தமிழ்ப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில், ஒரு தமிழர் முதன்முதலாக நிகழ்த்திய தமிழ்ப் பேச்சு இது. இப்பேச்சே ஒரு கவிதை. நான் இதை விருத்தப்பாவில் நிறுத்தியிருக்கிறேன்.

விழுப்புண்கள் பெற்றநகர் ; இலக்கி யத்தில்
விழாதபுகழ் பெற்றநகர் ; தொன்று தொட்டுச்
செழித்துவளர் தமிழ்மரபைக் கட்டிக் காக்கும்
சிறப்பான வேலிநகர் ; சங்கச் சான்றோர்
எழுத்துக்கள் எழுந்துவந்து தமிழ்ச்சிறப்பை
ஏற்றுமதி செய்யுநகர் ; வெற்றியாலே
கொழுத்தபுகழ்ப் பாண்டியர்கள் கொலுவி ருந்த
கூடல்நகர், பாடல்நகர் வெற்றிக் கோட்டம்.

நடுங்காத பெரும்புலமை நடத்தி வந்த
நக்கீரன் என்நினைவில் தோன்றிச் சொக்கன்
சுடுங்கண்ணுக் கஞ்சாமல் எதிர்த்து நின்று
சொற்சிலம்பம் ஆடுகின்றான் ; ஆன்ற விந்தே
அடங்கியசொற் பெருப்புலவர் தமிழ்ப்பண் பாட்டுக்
கதிகாரம் வகுக்கின்றார் ; அவர் தமிழ்த்தேன்
குடங்கவிழ்ந்து பெருக்கெடுக்கக் காதி ரண்டும்
குளிர்கின்றேன் ; காண்பதற்கு முடியவில்லை.

கலைத்துறையில் படிந்தெழுந்து பட்டந் தாங்கக்
காத்திருக்கும் களிறுகளே ; காப்பி யத்தில்
நிலைத்துவிட்ட நெடுஞ்செழியன் பரணர் பாரி
நெடுங்கிள்ளி நலங்கிள்ளி பேசி வந்த
சுளைத்தமிழில் இவ்வுரையை நிகழ்த்து கின்றேன் ;
சொல்லாலே தொடுகின்றேன் ; இந்நூற் றாண்டில்
முளைத்துவரும் குருத்தறிஞர் குலமே ! உம்மை !
முத்திருக்கும் மதுரையிலே வரவேற் கின்றேன்.

அரைவட்டத் தாவணியை விரித்துத் தோகை
அழகுமயில் ஆடுவதும், ஒளிப்ப ழத்தைத்
திருவிளக்கு மூக்காலே சுமந்த வண்ணம்
தெருமுனையில் நிற்பதுவும், பேறுகாலக்
கருமேகம் மருத்துவச்சி துணையில் லாமல்
கனத்தமழை ஈனுவதும், பொன்னைப் பூமிப்
பெருவயிறு தாங்குவதும் தங்க ளுக்கா ?
பிறர்நலத்துக் கென்பதைநீர் உணர்தல் வேண்டும்.

நாட்டுக்குப் பொதுவுடைமை நீங்கள்' என்றும்
நடுங்காத நெஞ்சுரத்தைப் பெற்றுத் தீயோர்.
ஆட்டத்துக் குத்தாளம் போடா தீர்கள் ;
அரசாங்கம் கொடுங்கோலாய் ஆகும்' என்று
தீட்டுகிறார் நல்லறிஞர் ரஸ்ஸல் , இந்தத்
திருநாட்டு மாணவர்கள் சிந்த னைக்கும்
பூட்டிருக்கக் கூடாது ; மடமை அச்சம்
புகவிடுதல் கூடாது கல்விக் கூடம்.

மூவேந்தர் முடியாட்சி, குப்த ராட்சி
மொகலாயர் பேராட்சி ஓய்ந்த பின்னர்
காவலற்ற கனித்தோட்டம் ஆனோம் ; மாற்றார்
கைப்பிடிக்குள் குரல்வளையைக் கொடுத்து விட்டோம்,
ஆவலுடன் மேனாட்டைப் பார்த்து நம்வாய்
அங்காந்தோம்; இந்நாட்டில் தோன்றுதொட்டு
நாமென்ன சாதித்தோம் ? என்ற எண்ணம்
நமக்கில்லை ; நாம்திருப்பிப் பார்க்க வில்லை.

அக்காலம் நம்நாட்டில் ஆங்கி லேயர்
அமைத்தகலைக் கழகங்கள், நம்மை ஆட்சிச்
சக்கரத்தில் சிக்கவைக்கக் கண்டோம் ; ஆமர்ம்
ச்ாமியெனும் அடிமைகளாய் ஆக்கக் கண்டோம்.
இக்கழகப அடிமைவிலங் கொடித்த பின்னர்
எழுகின்ற இளம்பரிதிக் கழகம் ; நாட்டு
மக்களினை 'ஒளிபடைத்த கண்ணா' என்று
மகிழ்வோடு வரவேற்கும் கழகமாகும்.

புலிபொறித்து விற்பொறித்துக் கங்கைகொண்ட
புல்லரிக்கும் வரலாற்றைப் படிக்கும் நீங்கள்
எலியாக ஏனிருக்க வேண்டும்? உங்கள்
இணையற்ற திருக்குறள் மேகலை சிலம்பின்
ஒலிமுழக்கம் உலகிலினிக் கேட்க, நாளும்
ஓயாமல் இக்கழகம் முயல வேண்டும்.
கலைவளர்க்கும் கனித்தமிழை, இந்த நாட்டின்
கண்ணியத்தைக் கண்ணிரண்டாய்க் காக்க வேண்டும்.

தட்டைக்காய்க் கொடுக்காலே தாக்கு கின்ற
தமிழ்நாட்டுத் தேள்நஞ்சு குளிர்ந்த தென்றும்
வட்டமலர் வாயமுதை உதட்டில் தேக்கி
வருகின்ற வண்டுதரும் வெளிநாட்டுத்தேன்
எட்டிக்காய் போன்றதென்றும் சொல்ல லாமா?
இளந்தென்றல் எங்கிருந்து வந்தால் என்ன?
கிட்டரிய கருத்துக்கள் எந்த நாட்டில்
கிடைத்தாலும் இக்கழகம் ஏற்க வேண்டும்.

கொம்பேறிப் படர்கின்ற கொடிக்குக் கூடக்
கொத்தாக மலர்கின்ற திட்ட முண்டு
நம்பிக்கைக் குரியபெரும் திட்டத் தோடு
நாட்டிளைஞர் கல்வியினைக் கற்காவிட்டால்
தும்பறுந்த காளைகளாய் ஆவர்; இந்தத்
துணைக்கண்டம் என்னாகும்? ஒழுங்கில் லாத
கும்பலுக்குக் களமாகும்; கலக்கு கின்ற
குளமாகும்; ஆர்ப்பாட்டக் கோட்டை யாகும்.

புதியதொரு உலகத்தைச் செய்வோம் என்று
புரட்சிப்பா பாடியவர், உம்பால் கொண்ட
அதிகமதிப் பாலன்றோ இக்க ருத்தை
அஞ்சாமல் எடுத்துரைத்தார்; பாயும் வைகை
நதிநிதியால் நாற்றங்கால் சிறக்கும்; இந்த
நன்னாடு மேன்மேலும் சிறப்ப தற்கு
மதியுடையார் பலர் வேண்டும்; அவரை இந்த
மதுரைப்பல் கலைக்கழகம் கொடுக்க வேண்டும்.

முழுவயிறு காணாதார், உழைத்து ழைத்து
முதுகெலும்பு முறிந்தவர்கள், பிறர் உழைப்பை
விழுங்குபவர் கைகளிலே பகடைக் காயாய்
விழுந்தவர்கள், ஓடப்பர் ஆகி யோர்மேல்
வழிகின்ற வியர்வையினால் அன்றோ, கல்வி
வளர்க்கின்ற கலைக் கழகம் எழுப்பி யுள்ளோம்?
எழுந்துவரும் இளஞ்சிங்க அணிவ குப்பே!
இதையுணர்ந்து பொறுப்போடு நடந்து கொள்க!

கொடிப்பாதை மலைமீது சகடக் குன்றைக்
குனிந்திழுக்கும் எருதைப்போல், உழைத்தாலன்றிக்
கிடைக்காத குறிக்கோள்கள் நமது நாட்டுக்
கிருப்பதனை நீரறிவீர்; ஆகை யாலே
நடப்பதெது? நன்மையெது வென அறிந்து
நடக்கின்ற திறம்வேண்டும்; மயங்க வைக்கும்
கொடிப்பின்னல் பேச்சுக்குக் குனிய வேண்டாம்.
குயில்வேறு; கரிக்குருவிக் கூட்டம் வேறு.

குனியாத பனியிமயக்குன்றத் துக்கும்
குமரிக்கும் ஒட்டுறவு தேவை; வைரக்
கணையாழிப் பொருத்தத்துக் காக வேண்டிக்
கைவிரலைக் குறைப்போமா? தன்மா னத்தை
நினையாமல் வேற்றுமொழி ஆதிக் கத்தை
நிச்சயமாய் வரவேற்க மாட்டோம்; மேனி
நனைகின்ற பூங்காற்றின் குளிர்ச்சிக்காக
நம் உடையை அம்பலத்தில் இழக்க மாட்டோம்.

பாலாறு கங்கைநதி பொன்னி வைகை
பாய்கின்ற இந்நாட்டுப் பொருளா தாரம்
மேலேறு தல்நமது குறிக்கோள் ஆகும்.
மேன்மேலும் பெருஞ்செல்வம் இங்கி ருக்கும்
நாலாறு பேரிடத்தில் சென்று சேர்தல்
நன்மைதரும் ஏற்பாடா? இல்லை! இந்தக்
கோளாறு தீராத வரைக்கும், நாட்டுக்
குறிக்கோள்கள் அத்தனையும் கேலிக் கூத்தே!

'என்னிடத்தில் உள்ளதெல்லாம் எனக்கே! உன்பால்
இருக்கின்ற தும்கூட எனக்கே' என்னும்
கன்னக்கோல் தத்துவத்தால் ஒருமைப்பாடு
கட்டாயம் வாராது. பசித்த ஓநாய்
முன்னிருக்கும் வெள்ளாட்டைக் கொன்று தின்று
முடித்தபின்னர், அவ்வாடும் நானும் இன்றைக்(கு)
ஒன்றுக்குள் ஒன்றானோம்; ஐக்கி யத்தில்
ஒன்றிவிட்டோம் என்றுரைத்தால் ஒப்பு வாரா?

பாடமொழி பயிற்றுமொழி பரந்த இந்தப்
பாரதத்தின் இணைப்புமொழி என்ற சொற்கள்
மேடையிலே கேட்கின்றோம்; ஒருமொ ழிக்கு
மேலான தகுதி தாய் மொழியென் கின்ற
பீடுற்ற பெருந்தகுதி யொன்றே. சங்கப்
பெருந்தமிழே ஆட்சிமொழி; உலகில் ஏனை
நாடுகளின் நட்புக்கும் அறிவு வேட்டை
நடத்துதற்கும் ஆங்கிலமே நமக்குப் போதும்.

ஆங்கிலத்தால் நாமடிமை ஆனோம்; சே! சே!
அதுவேண்டாம் என்றுரைப்போர், இங்கி லாந்தில்
வாங்குகின்ற கடனுக்குக் காலம் பார்த்து
வாசலிலே நிற்கின்றார்; எங்கள் இந்தித்
தேங்குழலைத் தின்னுங்கள் என்று வாயில்
திணிக்கின்றார்! தெரியாதா இவர் நினைப்பு?
தீங்குதரும் இத்திட்டம் வேண்டாம் என்று
திரண்டுவரும் மாணவரைப் போற்று கின்றேன்.

தமிழுங்கள் முரசாக, தொன்று தொட்டுத்
தழைத்துவரும் பண்பாடு கவச மாக,
உமதறிவே படைக்கருவி யாக, போற்றும்
ஒழுக்கமொன்றே துணையாகக் கொண்டு வாழ்வீர்.
இமைப்பொழுதும் ஊக்கத்தைக் கைவிடாமல்
இடர்களைவீர்! தாயகத்தைக் காப்ப தற்குச்
சிமிட்டாத கண்ணுடையர் ஆவீர்! கற்றுச்
சென்றிடுவீர்! வென்றிடுவீர்! வாழ்க நீவிர்!

# தன்மானச் சூறைக்காற்று

மாண்புமிக்க கலைஞர் மு. க. அவர்கள் 26 - 5 - 69 இல் தகடூரில் நிகழ்த்திய பெரியார் சிலை திறப்புப் பேச்சு இது. இயல்பாகவே இலக்கியத் தகுதி பெற்ற அப்பேச்சுக்குக் கவிதை உருவம் கொடுத்திருக்கிறேன்.

பள்ளிக்குச் செல்லென்றார் பெற்றோர்; நானோ
பகுத்தறிவுப் பள்ளிக்குள் நுழைந்து விட்டேன்,
எள்ளிநகை யாடிநின்றார் ஊரார்; மேலும்
இவனெங்கே உருப்படுவான் என்றும் சொன்னார்,
வெள்ளிநரை ஈரோட்டுத் தாடிச் சிங்கம்
விளையாடும் மற்களத்தில் உருவம் பெற்ற
மள்ளன்நான் உருப்பட்ட சேதி, இந்த
மண்ணறியும்; அறியாதா தமிழர் நாடு?

எங்கெங்கு மதமடமை யுண்டோ, சாதி
எங்கெங்குக் குரல்வளையை நெறிப்பதுண்டோ,
எங்கெங்குப் புராணங்கள் கடவுள் பேரால்
இந்நாட்டில் கொத்தடிமை வளர்ப்ப துண்டோ,
அங்கெல்லாம் துள்ளிவரும் வேலைப் போல
அறிவுலகத் தந்தையிவர் பறந்து சென்றார்.
இங்கெவர்க்கும் அஞ்சாமல், வெடித்துப் பாயும்
ஏவுகணைச் சொற்பொழிவு நிகழ்த்தி வந்தார்.

கடிக்கவந்த இந்தியினை முடிப்ப தற்குக்
கைத்தடியை இவரெடுத்த நேரம், பள்ளிப்
படிப்பறையில் நானிருந்தேன்; ஆனால் நெஞ்சம்
பகுத்தறிவுக் காந்தத்தால் இழுக்கப் பெற்றேன்.
பிடித்தபிடி விடாப்பெரியார், இரக்க மின்றிப்
பெல்லாரிச் சிறைக்குள்ளே தள்ளப் பட்டார்;
அடுத்தஅடி என்னவென்று கேட்போர் ஏங்க
அடுக்குமொழி பேசுமண்ணா அரங்கில் வந்தார்.

குடியரசுப் பாசறையில் அறிஞர் அண்ணா
குதிரைப்போர்ப் படைத் தலைவர் ஆனார்; ஓயாக்
கடிகார உழைப்பாலே இந்த நாட்டுக்
காளையர்க்குக் களம்அமைத்தார்; சூழ்நி லைக்கே
அடிபணிந்து பெரியாரைப் பிரிந்தார் ; இன்றோ
அனைவரையும் கண்ணீரில் ஆழ்த்திச் சென்றார்.
துடைத்தாலும் போகாது நிலாக் கறுப்பு !
தூக்கத்தி லும்போமோ இவர்நினைப்பு ?

முடியாது முடியாது என்ற வற்றை
முடித்துவைத்த பேரறிஞர் அண்ணா பெற்ற
அடியார்கள் அவருக்கோர் நாடகத்தை
அரங்கேற்றம் செய்தார்கள் ; அதிலோர் காட்சி !
கொடியானை போர்க்களத்தில் கிடப்ப தைப்போல்
குவிந்தமலர்க் கூட்டத்தில் கிடந்த அண்ணா
உடல்மீது பெருக்கெடுத்த க்கண்ணீர், இந்த
உரைவேந்தர் பெரியாரின் கண்ணீர் ஆகும்.

கொட்டுமழைக் கூட்டத்தில் அந்நாள், காஞ்சிக்
குளிர்ந்தமழைப் பேச்சறிஞர் குறிப்பிட்டார்கள்
வெட்டிக்கொண் டோடவில்லை; நாங்கள் கொண்ட
வியூகந்தான் புதுக்கட்சி; காலி யாக
விட்டிருக்கும் நாற்காலி என்றும் அந்த
வெண்தாடி வேந்தருக்கே! ஆனால் எம்மை
எட்டிவந்து நெருங்காதே பகையே; நாங்கள்
இரண்டுகுழல் துப்பாக்கி! என்று சொன்னார்.

கோழிக்கால் மிதிப்பதனால் வளரு கின்ற
குஞ்சுமுடம் ஆவதில்லை; யானைக் குட்டி
வேழத்தின் தாக்குதலைப் பெறுவ தெல்லாம்
வீரப்போர்ப் பயிற்சிக்கே! எருதை விட்டுத்
தாள்மிதிக்கச் சொல்வதெல்லாம் உதிரும் முத்துத்
தானியத்தைப் பெறுவதற்கே! பெரியார் சொற்கள்
ஆழத்தில் தைத்தாலும் எங்கள் மார்பில்
அத்தனையும் விழுப்புண்ணாய் ஆக்கிக் கொள்வோம்.

கலியாண சுந்தரனார் தலைமை யேற்ற
காஞ்சிபுரக் காங்கிரசில் உறுமி விட்டு
வெளியேறி வந்தஇவர் அக்கட் சிக்கு
வெடிகுண்டாய் மாறிவிட்டார்; அவர்கள் தந்த
ஒலிபெருக்கி மேடையிலே, கடைக்கால் கல்லை
ஒவ்வொன்றாய்ப் பெயர்த்தெடுத்தார்; காம ராசர்
நிலையைத்தான் ஆதரிப்பேன் என்று சொன்னார்;
நிச்சயமாய் இதுபெரிய புரட்சி யன்றோ?

விருதுநகர் மாம்பழத்தை ஆதரித்து
வேரோடு மாமரத்தைச் சாய்த்த வீரர்
சிறந்தஒரு மாமேதை ; வரலாற் றேட்டில்
சீக்கிரத்தில் கிடைக்காத புரட்சிப் பாடம் ;
கருத்துக்குக் கருவூலம் ; தமிழர் இன்று
கண்டெடுத்த பகுத்தறிவுப் பேழை ; சீறி
உருத்தெழுந்து தமிழ்நாட்டு மடத்தனத்தை
உதறிவரும் தன்மானச் சூறைக் காற்று.

பங்காரு பத்தரிடம் கற்றுத் தேர்ந்து
பகுத்தறிவுப் போர்செய்த பாட்டு மல்லன்
தங்கியிருந் தரசாண்ட புதுவை யூரார்
தடித்தனத்தால் குற்றுயிராய் மயங்கி வீழ்ந்தேன்.
'எங்கிருந்தோ பிறந்து வந்த பிள்ளை, என்னால்
எலும்பெல்லாம் முறிந்தானே !' என்று செந்நீர்
பொங்கிவரும் புண்ணுக்கு மருந்து போட்டார் ;
போர்ப்படையில் எனக்குரிய இடத்தைத் தந்தார்.

இருக்கின்ற காலத்தில் இவரைப் போல
இமயமலைப் புகழ்பெற்றோர், இந்த நாட்டின்
அரசியலில் சரியாமல் அறுப தாண்டாய்
ஆதிக்கம் செலுத்தியவர் எவருமில்லை.
உருக்கைப்போல் நெஞ்சுரத்தைப் பெற்ற, இந்த
உந்துவண்டிப் பெருங்குடும்பி வயிற்றின் முன்னால்
செரிக்காத உணவில்லை ; இவர்வாய்ச் சொற்கள்
சிந்தாத பட்டிதொட்டி எங்கு மில்லை.

புகுத்துகின்ற மடமையினால் , இந்த நாட்டில்
புதுப்பாதை மலராது ; தமிழ கத்தைப்
பகுத்தறிவால் ஆள்பவரே வேண்டும் ' என்று
பறைசாற்றிக் கொண்டிருந்தார் பெரியார்; இன்று
பகுத்தறிவால் ஆள்கின்றோம் ; எம்மை என்றும்
பாராட்டிக் கொண்டிருத்தல் தந்தை வேலை.
மிகுத்தபுகழ் பெற்றவரின் சிலையை. இந்த
மேதினத்தில் மகிழ்ச்சியுடன் திறந்து வைத்தேன்.

சிறுகள்ளும் பெருங்கள்ளும் ஔவைக் கீந்து
சிறப்பான வரலாறு பெற்று, நெல்லி
அருங்கனியும் அவளுக்குக் கொடுத்தான், இவ்வூர்
அரசியலில் நிலைத்துவிட்ட அதியன் ; நானோ
பெருங்குதிரைப் பேரரசன் இல்லை ; மாற்றார்
பேச்சம்புக் கீடு தரும் அமைச்சன். அந்தக்
கருங்கனியை நான்பெற்றால் பெரியா ருக்குக்
கட்டாயம் மகிழ்ந்தளிப்பேன் ! வாழ வைப்பேன்.

# வேனில் வேதனை !

இந்திர விழாக் கடற்கரை. கொழுந்து மாதவிக்கும் அவள் மார்பில் அழுந்தும் கோவலனுக்கும் யாழ்ப்பூசல் நடக்கிறது. பாட்டடி பட்டுப் பதைத்துப் பிரிகிறான் பட்டினக் கோவலன். அவன் இரும்பு நெஞ்சைக் கரும்பு நெஞ்சாக்கக் கடிதம் எழுதுகிறாள் கண்ணீர்க்காதலி. அக்கடிதத்தின் கவிதை வடிவம் வேனில் வேதனை.

செவ்வேளே ! எனைப்பிரிந்த
சினவேளே ! இரண்டு காலில்
எவவாறு நிற்கும் கட்டில் ?
இரண்டுசீர் ஒன்றோ டொன்று
கவ்வாமல் பிறப்ப துண்டா
காவியம் ஊடல் செய்ய
இவ்வேளை ஏற்ற தில்லை ;
இளவேனில் வந்த தாலே.

பொறிக்குயில் எக்கா ளங்கள்
புடைசூழப் படையெடுக்கும்
கருப்புவிற் கார னுக்குக்
களமானேன் ; அவன்வி டுக்கும்
நெருப்புக்கூர்க் கணைகி ழிக்க
நிற்குமென் நெஞ்சைத் தைக்க
விருப்பமா ? இன்றேல் காதல்
வேக்காடு சாக்கா டாகும்.

மாமரத் தோன்த ளிர்த்து
மறுபிறப் பெடுத்தான் ; புன்னைப்
பூமரத் தோன்வி ரிந்து
புதுப்பணக் காரன் ஆனான்.
காமனைக் கணைமு றித்துக்
கடத்திய நானோ, இந்நாள்
ஏமாற்றக் கன்னி யானேன் ;
இலையுதிர் கால மானேன்.

சலிக்காத விருப்பக் காதற்
சாப்பாடு சலிப்ப துண்டா ?
மலைக்கோட்டுப் பரிதித் தீயை
மழைவந்து நனைப்ப துண்டா ?
அலித்தன்மை வண்டுக் குண்டா
அல்லிப்பூக் குளத்தில் ? இன்று,
புலித்தென்றல் போராட் டத்தைப்
பொறுக்கவா ? இறக்க வாநான் ?

படுக்கைவேல் குத்தும் ; பட்டுப்
பஞ்சணை இன்றைக் கேனோ
முடிச்சுமுள் நெரிஞ்சி யாகி
மூன்றுகொம் பாலே முட்டும்.
அடிக்கடி துருத்தி நெஞ்சம்
அனற்காற்றை ஊதும் ; வந்து
கடிக்குமே பிரிவுப் பாம்பு !
கட்டாயம் அழிந்து போவேன்.

நெருப்பினை ஈக்கள் மொய்க்க
நெருங்குமா ? யானைக் கொம்பை
அரிக்குமா கறையான் ? தங்க
ஆசனத் திருக்கும் முத்தில்
துருப்பிடிப் பதுவு முண்டா ?
தோகையென் கற்பு நெஞ்சம்
அரக்குமா ளிகையென் றெண்ணி
அகலாதீர் ; நெருப்புக் கோட்டை !

வயிரத்தைத் தேய்க்கும் மற்றோர்
வயிரமே ! சிந்திக் காமல்
உயிருக்குச் சுருக்கு வைத்தே
ஓடுதல் நன் றா ? என்றன்
உயரத்தை நான்பி றந்த
உளைச்சேற்றால் அளக்க வேண்டாம் ;
வயிரத்தின் தரத்தைப் பார்க்க
வாயினால் கடிப்பா ருண்டா ?

பூனையின் எச்ச மென்றே
புனுகினை வெறுக்க லாமா ?
கானவாய்க் குழலைக் காட்டுக்
கழையென்று வீச லாமா ?
தேனுந்தான் ஈயின் எச்சில் !
தேவரீர் இந்தப் புள்ளி
மானையும் நடிக்கும் ஆடல்
மகளென்று தள்ள லாமா ?

தூக்கணங் குருவிக் கூட்டின்
தோற்றத்தை புடைய யாழின்
நாக்கான நரம்பைத் தொட்டு
நானிசை எழுப்பிப் பார்த்தேன்,
தூக்கென்றும் பாணி யென்றும்
தொடுக்கின்ற இசைவெள் ளத்தைக்
காக்கின்ற ஆணி இன்று
கழன்றதால் மயங்கி நின்றேன்.

ஒப்பற்ற பெரிய வானின்
உயரத்தில், நடுவில் தீய்ந்த
அப்பத்து வெண்ணி லாவால்
ஆயிரம் கொப்பு ளங்கள்.
வெப்பத்துக் காமம் வந்து
வெதுப்புவ தாலே, என்றன்
கொப்பத்து வெல்ல மார்பில்
கொப்புளம் கோடி! கோடி!

காற்சிலம் பிரண்டும், உங்கள்
கைச்சிலம் பிரண்டும் இன்றைக்(கு)
ஆர்த்திடும் தொழில் மறுத்தே
அடங்கின ; விரிந்து கொட்டும்
பாற்குடம் ஆனேன் ; தாக்குப்
பட்டதேன் கூடும் ஆனேன்.
நாற்குலப் பண்ணில் மூன்றாய்
நானானேன் உங்க ளுக்கே !

---

நால்வகைச் சாதிப்பண்கள் : இணை, கிளை, பகை, நட்பு. மூன்றாம்பண் பகை.

காசுக்கு மேடை யாட்டம்
கற்றவள், உங்கள் முன்னால்
ஆசைக்கு மேடை யாட்டம்
ஆடினேன்; பொன்மு ழுக்கு
வேசைநான் என்பீர் காதல்
வேந்தரே! உம்மை நெஞ்சில்
பூசித்தேன் என்ப தல்லால்
பொன்பொருள் கேட்ட துண்டா?

நெருங்கிநான் வரும்போ துங்கள்
நெஞ்சத்தைப் பங்கு போடும்
அரும்புமே கலையை எவ்வா(று)
ஆற்றுவேன்; அந்தக்கட்டிக்
கரும்பினை ஆலை வாயில்
கசக்கிநீர் பிழிய லாமா?
நெருங்குமுள் புலாவெ றுத்தீர்;
நெடுஞ்சுளை ஏன்வெ றுத்தீர்?

இழுத்துநாண் வளைத்த விற்போல்
இதழ்களைக் கொண்ட உங்கள்
செழித்தபொன் மேக லைமேல்
சீற்றமா? குருக்கள் முன்னால்
கழுத்தைநான் வளைக்க வில்லை
கயிற்றுப்பொன் வேலிக் காக!
பழச்சுவைக் காரி நான்உம்
படுக்கைப்பங் காளி யன்றோ?

காவிரி புணரும் நீங்கள்
கங்கையைப் புணரு தற்கே
ஆவலேன் கொண்டீர் ? கொண்டால்
அதைவெளிப் படுத்த லாமா ?
சேவலின் கொக்க ரிப்புத்
தெரியாத கோழி யா நான் ?
கோவலர் கூற்றை யாழைக்
கொண்டுநான் மறுக்கப் பார்த்தேன்.

மாதவிக் கொடிப டர்ந்த
மஞ்சத்தை மற்றொ ருத்தி
பாதியாய்க் குறைக்க வந்தால்
பார்த்துக்கொண் டிருப்ப னோநான் ?
வேதனை நெருப்புக் குன்றம்
வெடித்தது ; மூடி யாலே
மாதுநான் அதைய டக்க
மணங்கொண்டேன் ; தோல்வி கண்டேன்.

கட்டிலில் இருக்கும் போதென்
கால்களைப் பொறுத்தீர் ; யாழைத்
தொட்டின்று தவறு செய்த
தொடிக்கரம் பொறுத்தால் என்ன ?
வெட்டுக்கள் இன்றி ஏது
விழுப்புண்கள் ? பூச லின்றித்
தொட்டுச்சு வைக்குங் கா தல்
சுறுசுறுப் படைவ துண்டா ?

மணம்மாறு படத்தொ டுத்த
மல்லிகை கழுநீர், மற்றும்
புனம்நாறும் சண்ப கப்பூ
பூட்டிய தாழை யேட்டில்
குணம்மாறு பாடில் லாஎன்
கொள்கையை விளக்கி யுள்ளேன் ;
சினம்மாறு படுமா ? கண்கள்
சிவக்குமா நமக்கு மீண்டும் ?

# கற்புச் சிறை

அபெலார்டு—ஹெலாய் என்ற காதற் பறவைகளின் வாழ்க்கை ஒரு கண்ணீர் வரலாறு. உலகில் உள்ள புகழ் பெற்ற எல்லாக் காதற் கதைகளையும், வரலாறுகளையும், படித்திருக்கிறேன். ஆனால் எந்த ஒரு கதையும், வரலாறும் என் உள்ளத்தை இப்படி உலுக்கியதில்லை.

கி. பி. 1116ஆம் ஆண்டு, பீட்டர் அபெலார்டு (Peter Abelard) தன் முப்பத்தேழாவது வயதில், பிரெஞ்சு பல்கலைக்கழகத்தில் மிகவும் மதிப்பு வாய்ந்த 'தத்துவப் பண்டாரகர்' பட்டம் பெற்று, பாரீசு பல்கலைக் கழகத்தில் தருக்கநூற் பேராசிரியனாக அமர்ந்தான். மேலும் அவன் ஒரு பாதிரி; நாட்டர்டாம் மாதாகோவிற் குருக்களில் ஒருவன்; சமயக் கொள்கையில் புதுமை நோக்கம் கொண்டவன். அவன் புலமைத்தேர் ஐரோப்பாக் கண்டத்தில் கொடிகட்டிப் பறந்தது. செல்வக் குடும்பத்தில் பிறந்த அபெலார்டு அழகனுங்கூட.

ஹெலாய் (Heloise) பத்தொன்பது வயதுக் கொத்து மலர்; பள்ளிப்படிப்பை முடித்து வெளியேறிய கிள்ளை. பாரீசில் தன் மாமன் வீட்டில் தங்கியிருந்த அவள் அபெலார்டின் அறிவு வெளிச்சத்தின் முன்னால் கண்கூசி நின்றாள். அவள் அவனுக்கு மாணவியானாள். கல்வியில் தொடங்கிய அவர்கள் நட்பு, புள்ளியில்லாக் கல்வியில் போய் முடிந்தது.

எரிமலையை எவ்வாறு கைவைத்து மூட முடியாதோ, அதுபோல் காதலையும் யாராலும் மறைக்க முடியாது. ஹெலாயைப் பற்றி அபெலார்டு எழுதிய காதல் வரிகளை, பாரீசுப் பருவவாய் ஒவ்வொன்றும் முணுமுணுக்கத் தொடங்கியது. அவர்கள் பலாச்சுளைத் தொடர்பு பலர் வாயில் விழுந்ததால் அலராயிற்று.

காதலர் பிரிட்டானிக்கு ஓடிவிடுகின்றனர். அபெலார்டு அவளைத் தன் கழுத்தில் நிரந்தர மாலையாக்கிக் கொள்ள விரும்பினான். திருமணத்தால் அவன் சமய மதிப்பும், பதவியும் பாழ்படும் என்பதை உணர்ந்த ஹெலாய் முதலில் மறுத்தாள். மேலும் திருமணத்தால் காதல் வாழ்வு சுவையற்றதாகி விடுகிறது என்பது அவள் கொள்கை. எப்படியோ திருமணம் நடந்தேறி விட்டது; குழந்தைக்கும் தாயானாள் ஹெலாய்.

காதலர் மீண்டும் பாரீசு திரும்பினர். அபெலார்டின் சமயவாழ்வு ஹெலாயோடு வெளிப்படையாக இல்வாழ்க்கை நடத்துவதற்கு தடையாக இருந்த காரணத்தால் மீண்டும் களவொழுக்கத்தில் ஈடுபட்டனர். இதையறிந்த ஹெலாயின் மாமன் ஃபுல்பெர்ட் (Fulbert) குமுறும் எரிமலையானான். ஒருநாள் இரவு அபெலார்டு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது, ஃபுல்பெர்டின் அடியாட்கள், கண்மூடித்தனமாகத் தாக்கி அவனை முடமாக்கினர். உயிர்பிழைக்க அபெலார்டு ஊரை விட்டே ஓடினான். காதலியின் மென்மையான உள்ளம் உடைந்து போகுமே என்ற காரணத்தால், அபெலார்டு தனக்கு நேர்ந்த அவமானத்தையும், ஆற்றொணாத் துயரையும் ஹெலாய்க்குத் தெரியப்படுத்தவில்லை. அவளை

ஒரு கன்னி மாடத்தில் சேர்த்து விடுமாறு வற்புறுத்தினான். அவளும் கன்னிமாடத்தில் சேர்ந்து கொஞ்சநாளில் கன்னிமாடத் தலைவி யும் ஆனாள்.

வாழ்க்கைத் துன்பத்தால் மனமுடைந் திருந்த ஒரு நண்பனுக்கு, ஒருமுறை ஆறுதல் கூறுவதற்காக அபெலார்டு தன் வாழ்க்கைச் சோதனைகளை ஒரு கடிதமாக்கி அனுப்பியிருந் தான் அக்கடிதம் எதிர்பாராதவிதமாய் ஹெலாயின் கையில் சிக்கிவிட்டது. அக்கடிதத்தைக்கண்ணுற்ற ஹெலாய் கண்ணீர்க்குளமானாள்.தன்பொருட்டுத் தன் காதலனுக்கு ஏற்பட்ட பெருந்துன்பத்தை நினைந்து கதறி அழுதாள். அவ்வழுகையின் வெளிப்பாடே இக்கடிதம். ஒவ்வொரு சொல்லை யும் கண்ணீரில் ஊறவைத்து இக்கடிதத்தை அவள் எழுதியிருக்கிறாள்.

அபெலார்டு—ஹெலாய் கண்ணீர் வரலாறு அலெக்சாண்டர் போப், ரால்ஃப் ஆடம்ஸ் கிரேம். ஜியார்ஜ் மூர், ஹெடன் வேடல் போன்ற கவி ஞர்கள், நாடகாசிரியர்களின் கைவண்ணத்தால் காவிய வடிவம் பெற்றுச் சிறப்புற்றது.

வேட்டை நாய்கள் போல் தன்னைப் பின் தொடர்ந்து தாக்கிய எதிரிகளுக்கு அஞ்சி அபெ லார்டு பிரெஞ்சு நாட்டில் உள்ள ஒவ்வொரு மடமாக ஒளிந்து திரிந்தான். சமயப் போர்வை யில் சாக்கடை வாழ்க்கை நடத்திவந்த அக்காலப் பாதிரிமார், நேர்மையான தன் காதலை எள்ளி நகையாடியதைக் கேட்டு உள்ளம் புண்ணானான். அபெலார்டும், ஹெலாயும் கற்புவிலங்கைத் தாங் களே மாட்டிக்கொண்டு வாழ்நாள் பூராவும் ஏக்க வாழ்க்கை நடத்தினர்.

தாயாய்த் தந்தையாய்த்
    தழுவுகின்ற காதலராய்,
தலைவராய் உடன்பிறப்பாய்
    விளங்கும் அபெலார்டுக்கு.
அவருடைய அன்புமனைவி,
    ஆருயிர்க் காதலி. அடிமை,
உடன்பிறப்பு, அழுங்குழவி...
    ஹெலாய் ஆராக்காதலோடும்
பணிவோடும் விடுக்கும்
    கண்ணீர் ஓவியம்...

ஆவியே! நீங்கள் நண்பர்க்
    கனுப்பிய கடிதக் கண்ணீர்க்
காவியங் கண்டேன்; நீண்டக்
    கைநடுக் குற்றேன்; உம்மைத்
தாவிய உரிமைக் கைகள்
    தாள்களைத் தொடலாம் என்று
தூவிய உம் கருத்துத்
    தோணியைத் திறந்து பார்த்தேன்.

கடிதத்தில் கண்ட தெல்லாம்
    காதல! உங்கள் நெஞ்ச
வெடிப்புகள்! முறிந்து வீழும்
    வேதனைத் தூண்கள்; துன்பத்
தடிப்புகள்! தீயோர் சுட்ட
    தழும்புகள்! தைத்த புண்கள்!
அடிக்கடி கிளம்பு கின்ற
    அனற்பெரு மூச்சுத் தேர்கள்!

கண்களால் உமதெழுத்தைக்
கவ்விய வுடனே, காய்ந்த
புண்களை மீண்டு மின்று
புதுப்புண்கள் ஆக்கிக் கொண்டேன்.
எண்பது முறைப டித்தேன்;
இதயத்தில் வீக்கம் பெற்றேன்.
கண்களே வாயில், ஏங்கும்
காதலர் துன்பத் துக்கே!

புல்லர்கள், நமது வாழ்வைப்
புரட்டிய இரக்க மில்லார்,
பல்கலைக் கழக மேறிப்
படுகொலைப் பட்டம் பெற்றோர்
கொல்வதற் கிலக்காய் உம்மைக்
குறிக்கின்றார்; நீரும் நானும்
கல்லறைக் குள்ளே கூடக்
கண்துஞ்ச ஒப்ப மாட்டார்.

சிந்தையில் உம்மை எண்ணிச்
செபமாலை உருட்டு கின்றேன்
நொந்துநம் நைந்த வாழ்வை
நூல்களாய் எழுதி, இந்தப்
பந்தயச் சமுதா யத்தில்
பறையறை வித்தால் என்ன?
விந்தையிவ் வுலகை மீளா
வெட்கத்தில் சாய்த்தால் என்ன?

கண்ணீரை வடிக்க வேண்டாம்
காதலி என்றீர்! பாயும்
கண்ணீரே இடுக்கித் துன்பக்
கவலைக்குக் கால்வாய்; உங்கள்
எண்ணத்தை நெருப்பு மூச்சை
எழுதுங்கள் மடலில்; என்றன்
கண்ணீரில் அவைபி ரண்டும்
கலக்கட்டும்; ஒன்றா கட்டும்,

அற்புதம் இந்நாள் ஏதிவ்
வகிலத்தில்? விரிந்து போன
கற்களா கூடும்? நம்மைக்
காதலா இனிமேல் கூட்டும்?
நிற்கிறேன் உமது வான்வில்
நீண்டமுக் காட்டுக் காட்டில்!
கற்பினை வற்பு றுத்தும்
கண்ணியில் வீழ்ந்து விட்டேன்!

படுக்கையின் அருகே உங்கள்
படமுண்டு..பார்வை யாலே
கடித்தென்னை விழுங்கும் ஊமைக்
காதலன்..அப்ப டத்தைக்
கடைக்கண்ணால் பார்த்து நெஞ்சைக்
காளவாய் ஆக்கு கின்றேன்;
அடிக்கடி ஊடிக் கூடி
அரைக்காதல் நடத்து கின்றேன்.

எழுத்துவாய்க் கடித மொன்றே
எதிரிகள் குறுக்கி டாத
மொழித்திரை; காத லர்க்கு
முக்காட்டுத் தூது; வார்த்தை
வழித்துணை; கனவுக் காதல்
வரிப்படம்; பேசும் அந்த
எழுத்துவா கனத்தால் அன்றி
என்னுயிர்ப் பயணம் இல்லை.

கடிதத்தை எழுதும் போது
கைகளுக் கின்பம்; பின்னர்
உடையினில் அதைம றைத்தல்,
உம்மிடம் சேர்க்க வேண்டி
இடையினில் ஆள்பி டித்தல்,
ஏவுதல், கடிதம் உம்மை
அடைந்ததா என்று நைதல்
அனைத்துமே துன்ப இன்பம்!

மூளையில் அறிவை நட்டு
முளைக்கின்ற தத்து வத்தைக்
காளையே! நீங்கள் உங்கள்
கடிதத்தில் எழுத வேண்டாம்.
ஏழைநான் விழைவ துங்கள்
இதயத்துப் பேச்சை! நீவிர்
நாளையே அனுப்பி வைப்பீர்;
நல்லநாள் பார்க்க வேண்டாம்.

வெள்ளைத்தாள் காதல் தூதை
விரும்பிநீர் அனுப்பி வைத்தால்
அல்லிப்பூ உதட்டு முத்தம்
ஆயிரம் அதற்க ளிப்பேன்.
உள்ளத்தில் பொறாமை யேதும்
உண்டானால், அதனை யந்த
வெள்ளைத்தாள் மீது காட்டும்:
வேறெவர் மீதும் வேண்டாம்.

என்னையென் குற்றத் தாலே
எடைபோட்ட மாமன், என்றன்
பெண்மையை மதிக்க வில்லை;
பெரும்புகழ் பெற்ற உம்மை
அன்னியன், மனிதன் என்று
அளவுகோல் கொண்டு பார்த்தான்.
என்னுயிர்க் காத லர்நீர்
என்பதை எண்ணவில்லை.

மாதர்க்கு மங்க லச்சொல்
மனைவிதான்; எனினும் உங்கள்
பாதியாய் மாறு தற்குப்
பற்றுநான் கொள்ள வில்லை.
காதலி என்ற சொல்லில்
கனிகின்ற உரிமை யின்பம்
மோதிரத் திரும ணத்தின்
முன்னாலே தகர்ந்து போகும்.

சாவிலே முடியு மிந்தச்
சாத்திரத் திரும ணத்தால்
காவலும் கட்டுப் பாடும்
கடமையும் தோன்றிக் காதல்
ஆவலைக் குறைக்கும்; நெஞ்சில்
அயல்விருப் பங்கள் தோன்றும்;
தாவிடும் காத லின்பத்
தரம்மிகக் குறைந்து போகும்.

காதலைத் தவிர வேறு
கருத்துக்கும் உணர்ச்சி கட்கும்
ஆதர வாக நெஞ்சில்
அரங்கேற்றம் செய்ய மாட்டேன்.
பூதலத் தரசி தாங்கும்
பொன்முடி, நீங்கள் சூட்டும்
காதலிப் பட்டத் துக்குக்
கால்தூசு போன்ற தாகும்.

மதுக்குட மங்கை யென்னை
மயக்குதற் காக நீங்கள்
புதுப்புதுக் கவிதை யாரம்
பூட்டினீர்! அறைக்குள் ளேநாம்
பதுக்கிய காதல் இந்தப்
பாரீசில் அலராயிற்று.
விதைப்பழம் என்னை யாக்க
விரும்பினீர்; வேற்றூர் சென்றோம்.

நமக்காகக் கவிதைக் காதல்
நடத்தினீர். அதைப் படித்துத்
தமக்காக என நினைத்துத்
தம்முடை நெகிழ்ந்தார் பெண்கள்.
சிமிழ்க்கின்ற கண்ணில் உம்மைச்
சிறைசெய்தார்; பொறாமை யாலே
'சுமைச்சுவைக் கவிதை இந்தச்
சுள்ளியின் மேலா?' என்றார்.

கண்மணி என்றீர்; தேவ
கன்னியென் றுயர்த்தி வைத்தீர்;
அண்மையில் கிடத்தி என்மேல்
அணுச்சோத னைகள் செய்தீர்.
உண்மையைக் கூறு கின்றேன்;
உம்மீது வெற்றி கொண்ட
பெண்மையைப் பெற்ற தாலே
பெருமிதம் மிகவும் கொண்டேன்.

தொடுவதும் உங்கள் மார்பில்
தோய்வதும் குற்ற மென்றால்
அடிக்கடி அதனைச் செய்ய
ஆவல்நான் கொள்ளு கின்றேன்.
நொடிக்கொரு தரம்சி ணுங்கி
நோய்தரும் எனது நெஞ்சை
அடக்கநான் முயன்று பார்த்தேன்,
அதற்குநான் அடங்கி விட்டேன்.

தூக்கத்தில் உம்மை வந்து
துளியேனும் இரக்க மின்றித்
தாக்கினர் அற்பர்; அந்தத்
தருணத்தில் இருந்தி ருந்தால்
தூக்கிய கைகள் உம்மைத்
தொடவிட் டிருக்க மாட்டேன்.
தாக்கியோர் என்பி ணத்தைத்
தாண்டியே சென்றி ருப்பர்.

கடவுளை மணந்த இந்தக்
கன்னியர் நடுவில் உங்கள்
தடந்தோளை மணந்த தையல்.
தாங்கிய சிலுவைக் கூட்டம்
இடம்பெறும் இடத்தில் காதல்
ஏக்கத்தைத் தாங்கும் கோதை!
மடமெங்கும் கடவுட் சின்னம்!
மனத்திலென் காதற் சின்னம்!

இருவரில் ஒருவ ராக
இருந்தஅந் நாளில், பாரில்
பிரிவென்ப திருப்ப தாகப்
பேதைநான் எண்ண வில்லை.
ஒருமுறை கூட மேனி
ஒதுங்கநீர் விட்ட தில்லை.
எரிந்தபின் னாலும் அன்பே!
என்சாம்பல் காத்தி ருக்கும்.

புதுப்பிக்க முடியா அந்தப்
பொல்லாத இன்பத் துக்குப்
பதைப்புறு கின்றேன்; பாம்புப்
படுக்கையில் கிடக்கு மிந்தக்
கதுப்புத்தேங் கனியின் வாழ்க்கை
கத்திமேல் தானா? நெஞ்சக்
கொதிப்பாறி அமைதி காணக்
குளிர்புனல் ஓடை யுண்டா?

வயது ஏற ஏற அபெலார்டு—ஹெலாய் காதல், தத்துவக் காதலாக மலர்ந்தது; உள்ளம் ஓய்ந்து, அவர்கள் காதலில் மூளை ஆதிக்கம் பெற்றது. அவர்கள் கூட்டு முயற்சியால் கிறித் தவக் கன்னிமாடப் பெண்களுக்குரிய ஒழுக்க விதி கள் உருப்பெற்றன. தன்னடக்கம், வறுமையை விரும்பி ஏற்றுக்கொள்ளல், அமைதி ஆகிய மூன் றும் அவ்விதிகளின் தலையாய கோட்பாடுகள்.

தன்னுடைய அறுபத்து மூன்றாம் வயதில், (21, ஏப்ரல், 1142) எந்தத் துணையுமின்றி, அன்பு காட்டுவோர் அருகில் யாருமில்லாமல் பீட்டர் அபெலார்டு உயிர் நீத்தான். அவன் உடல் ஹெலாயிடம் ஒப்படைக்கப்பட்டது. இரு பத்திரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஹெலாய் இறந்தாள். அபெலார்டின் கல்லறைக்கருகில் அவளும் புதைக்கப்பட்டாள். உலகப் புகழ் பெற்ற இக் காதலர்களின் கல்லறைகளைப் பாரிசில் உள்ள பீரி லாசெய்ஸ் (Pere Lachaise) என்னும் இடத்திலுள்ள இடுகாட்டில் இன்றும் காணலாம். அக்கல்லறைகளின் நடுவில் பதிக்கப் பெற்றுள்ள சலவைக் கல்லில் பின் வருமாறு எழுதப்பெற்றுள்ளது:

"இம்மடத்தைத் தோற்றுவித்த பீட்டர் அபெலார்டும், அவருடைய முதல் மாணவி ஹெலாயும் இக்கல்லறையில் புதைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கல்வியும், நுண்ணறிவும் மிக்கவர்கள்; காதலால் ஒன்றுபட்டவர்கள்; தோல்வியில் முடிந்த திருமண வாழ்க்கையை மேற்கொண்டவர்கள். தங்கள் குற்றங்களுக்காக வருந்தி மன்னிப்புப் பெற்றவர்கள். இன்று இவர்கள் இறைமையில் கலந்து, இடையறாத அன்பில் திளைக்கிறார்கள்."

# மாற்றான் தோட்டத்து மல்லிகை

'இந்த நூற்றாண்டு இருபெரும் வீரரைத் தோற்றுவித்தது. அவர்களுள் ஒருவன் நெப்போலியன்; மற்றொருவன் ஜியார்ஜ் கார்டன் லார்டு பைரன்' என்று, பைரன் இறந்தபோது ஐரோப்பியத் தாளிகைகள் கண்ணீர் எழுத்துக்களைக் காட்டி வருந்தின.

கால் ஊனம் பெற்ற இக்காதல் கவிஞனின் அழகு, எந்தப் பெண்ணாலும் எதிர்க்க முடியாத ஆற்றலைப் பெற்றது. நான்கும் இருபதும் நடந்த வயதில், உலகம் போற்றும் வான் புகழை இவன் வாரிக்கொண்டவன். கொலைக் கஞ்சாப் பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்து, கலைக் கஞ்சா மயக்கத்தில் கடைசிவரை வாழ்ந்து, முப்பத்தாறில் தன் மூச்சை முடித்துக் கொண்டவன்.

இவன் காதலிப்பான்; ஓய்ந்த நேரத்தில் கவிதை எழுதுவான். இவன் காதல் இலக்கு எப்போதும் குறிதவறிப் போனதில்லை. தான் விரும்பும் பெண்ணின் காதலைப் பெறத் தேனழிக்கும் வேடுவன்போல் இவன் நெருப்புப் போராட்டம் நடத்துவான்: தேனைப் பிழிந்து கொண்டதும் அடையை இரக்கமின்றி வீசி எறிந்து விடுவான். எந்தக் கம்பத்துக்கும் கட்டுப்படாத மத யானை இவன். இந்தக் கடகளிற்றைத் தன் கட்டுத்தறியில் நிலையாகக் கடைசிவரை கட்டி நிறுத்திய பெருமை இத்தாலி நாட்டு முத்தார அழகி தெரிசாவையே சாரும்.

இச் சரிகைக் கூந்தல் சாயல்மயில்' பன்மொழி பேசும் இன்னிசைக் கின்னரம்; மயக்கும் அழகுக்கு மாதிரிப் படிமம்; கவிதை ஊறல்; நாகரிக நளினம்; பணம் படைத்த மாலைப் பிரபுவை மணந்த காலைச் செங்கதிர். அப் பாட்டு நிலாவை, பைரன் தன் கூட்டு நிலாவாக் கிக் கொண்டான். அவன் அவளுக்கு அனுப்பிய எழுத்துத் தூது இங்கு இலக்கிய வடிவம் பெற்றிருக்கிறது.

புதுமொட்டுப் பருவத்தை
பொன்னிழைத்த தொட்டிலிலே
கழித்து விட்டு
மதுமொட்டுப் பருவத்தை
மதக்கன்னி மாடத்தில்
கழித்து விட்டு
பதினெட்டுப் பருவத்தைப்
பஞ்சணையில் கழிக்கின்ற
படுக்கைப் பூவே!
மதிநட்டுக் கொலுவிருக்கும்
கழுத்தழகி நானுன்னை
மறப்ப தெங்கே!

வரிக்கண்ணால் உன்னைப்போல்
வார்த்தைகளை வழங்குமிந்தப்
புத்த கத்தைச்
சிரிப்புமலர் மரத்தடியில்
சீக்கிரத்தில் நான்படித்து
முடித்து விட்டேன்.
சுருக்கிவைத்த சுவைக்காமச்
சூத்திர நூல் போன்றவளே!
வெறும் எழுத்தை
நெருக்கிவைத்த புத்தகத்தை
நீயிருந்தால் நான்விரும்பித்
தொடவே மாட்டேன்.

பக்கத்தைப் புரட்டுகையில்
படங்காட்டும் பழத்தோட்டப்
பாட நூலே
இக்கடிதம் இந்நூலில்
இத்தாலி மொழியினிலே
எழுதி டாமல்
மிக்கபுகழ் ஆங்கிலச்சொல்
மேனியினால் நான்எழுதி
யுள்ளேன்; உன்றன்
பக்கத்தில் இருப்பவர்கள்
பார்த்திதனைப் படிக்காமல்
இருப்ப தற்கே.

மாற்றான் பூந்தோட்டத்து
மல்லிகையே ! அறுநான்கு
திங்க ளின்முன்
ஆற்றோரம் உன்காதல்
அரசியலை அடையாளம்
கண்டிருந்தால்
வேற்றொருவன் மார்பிலுனை
விளையாட விட்டிருக்க
மாட்டேன் ; என்றன்
நாற்றங்கா லாயுன்னை
நானாக்கி என்னன்பை
நட்டி ருப்பேன்,

கன்னிப்பூ மலர்கின்ற
காடான ஐரோப்பாக்
கண்டத் துக்குள்
என்னழகுத் தேரேறி
இறங்காத இடமில்லை !
துள்ளி ஓடும்
மின்னலையும் வெற்றிகண்டேன்
மேலேறி வானவில்லை
மணந்தேன்; ஆனால்
உன்னழகின் உயரத்தை
ஒருத்தியிடம் இதுவரையில்
கண்ட தில்லை.

நூலேணிக் காதலுக்கு
நோக்கத்தால் வரவேற்புத்
தந்த பெண்ணே !
போலோனில் உன்பொருட்டுப்
போடட்டு மாகாதற்
புதுக்கூடாரம் ?
காலார நடந்தோர்நாள்
கால்வாயின் கரையோரம்
காதல் நட்டு
மாலானோம் ; இனியென்றும்
மாறாத காதலுக்குள்
மாட்டிக் கொண்டோம்.

குமரிமலர் சூடிவிட்டுக்
குளிக்காமல் திரிகின்ற
வண்டை, அந்திச்
சமயத்தில் கதவடைக்கும்
சச்சரவுத் தாமரையைப்
பாடிப் பாடி
அழுதொழுகும் ஆங்கிலத்தை
ஐயய்யோ ! கறைசெய்தேன் !
இரவில் கூம்பாக்
குமுதமல ரேஉன்னைக்
குளிப்பாட்டு வேன் ; இனியென்
கவிதை யாற்றில் !

எனக்கென்றோர் எதிர்காலம்
இவ்வுலகில் இனிமேலே
இருக்கு மானால்
உனக்கன்றி வேறொருத்திக்
கொருநாளும் இடமில்லை
உறுதி யாக !
புனக்கொல்லைப் பந்தலிலே
போயேறிக் கொடிமின்னல்
படர்வ தில்லை.
இனக்கவர்ச்சி இலக்கியமே !
இனியொருத்தி மேனியில்நான்
படர மாட்டேன்.

பனிநரைத்த தலையோடு
பார்மீது படுத்திருக்கும்
முதிய ஆல்ப்சும்,
நினைந்துநினைந் திரவெல்லாம்
நெஞ்சுருக ஓலமிடும்
கடற்கைம் பெண்ணும்,
கனிமொழியே நம்மிருவர்
கட்டிலினைப் பிரித்ததுண்டு ;
கடலும் 'குன்றும்
இனிநம்மைப் பிரிக்காமல்
இருப்பதற்குத் தடைபோட
இன்றே நீவா !

# விருந்துக்கு வந்த விருந்து

ஆங்கிலப் பெருங்கவிஞன் சேக்ஸ்பியரைப் பற்றியும், அவன் நாடக இலக்கியங்களைப் பற்றியும் எழுதப் பட்ட நூல்களே உலகில் அதிகம் என்று கூறுவர். ஆனால் கார்சிக மறவன் நெப் போலியனைப் பற்றி எழுந்த நூல்கள், தொகையில் அவற்றையும் மிஞ்சி விட்டன. இக்கத்திக் காவலனைப் பற்றி எழுதப் பட்ட நூல்கள் மொத்தம் 30,000. புரவியிலும் போர்க்களத்திலும், கப்பலிலும் கனகமணி மாளிகையிலும் இருந்து கொண்டு இவன் எழுதிய கடிதங்களின் தொகை 75,000. இவன் மோதற் கடிதம் எழுதுவதிலும் வல்லவன்; காதற் கடிதம் எழுதுவதிலும் வல்லவன்.

1806 ஆம் ஆண்டு, போலந்தின் இதய நகரான வார்சாவில் இவன் நாளோலக்கம் நடத்திக் கொண்டிருக்கிறான்; பசியெடுக்காத அவ்வூர்ப் பணக்காரப் பிரபுக்களை வசியம் செய்ய வயிற்று விழா நடத்துகிறான். அந்த விருந்தில் கண்டெடுத்த மருந்துச் செடி மேரி வலூஸ்கா. அவள் ஒரு பழுத்த பிரபுவின் குருத்து மனைவி.

முதலில் நெப்போலியன் அவளை ஆட அழைக்கிறான்; பின்னர்க் கூட அழைக்கிறான். முதலில் மருண்டு பார்த்த அம்மார்புமான், பின்னர் இவன் மடியில் நிரந்தரமாகச் சுருண்டு விழுந்து விடுகிறது. அவளுக்கு அவன் அனுப்பிய எண்ணத்தேர் இங்கு எழுத்தலங்காரம் பெறுகிறது.

முதல் மனைவி ஜோசபைன் நெப்போலியனை விட மூன்று வயது மூத்தவள். அவளால் ஈடு கொடுக்க முடியாத இவன் இளமைப் பசியை, இவ்வாடுமயில் தீர்த்து வைக்கிறாள். இப்பான் உறவு, அவர்களுக்கு ஓர் ஆண்மகவை அறுவடையாக்குகிறது. இந்நெப்போலிய நிழல் எதிர்காலப் பிரெஞ்சு அரசியலில் பிரபுச் செல்வாக்குப் பெற்றதோடு, 'லீஜியன் ஆஃப் ஆனர்' (Legion of Honour) என்னும் பெருஞ் சிறப்பையும் பெற்று வாழ்ந்தது.

விருந்தருந்த வந்தவளே! நீயே என்றன்
விருந்தாகச் சம்மதமா? என்னைச் சுற்றிப்
பறந்துபறந் தாடிவந்த பார்வைப் பேச்சுப்
பாவாடைப் போலந்து மயிலே! மேரி!
மறந்துவிடும் பெருளா நீ? இறங்கத் தூண்டும்
மாணிக்கச் சுரங்கம் நீ! சொந்தச் சோதி
நிறைநிலவு மண்டலம் நீ! நீநீ! என்றன்
நினைப்பும் நீ! நினைப்புநிழற் கனவும் நீயே!

காலான தந்தத்தூண் கடைசல் மீது
கட்டிவைத்த மொட்டுமலர் மேனிப் பெண்ணே!
மேலான என்பிரெஞ்சு மொழியைப் பாதி
மென்றுவிட்டு நீகுழறி மொழிந்த போது
நாளான மதுச்சாற்றுப் போதை ஏறி
நான்என்னை இழந்துவிட்டேன்; நகைக்கும் உன்கண்
தேளாலே நான் கொட்டப் பட்டேன் ; உன்றன்
திருமேனி மந்திரத்தால் கட்டுப் பட்டேன்.

சித்திரப்பூ மெத்தையின்மேல் செங்கோல் ஆட்சி
செய்யுமிள வரசிகளும், மேடை யாட்ட
மூத்திரைப்பொன் நடிகையரும் நான ழைத்தால்
முகம் சற்றும் சுழித்ததில்லை ; ஆனால் நீயோ
நத்தையைப்போல் என்னிரண்டு கடிதம் பட்டு
நாணமெனும் ஓட்டுக்குள் சுருங்கி விட்டாய்.
மத்தாப்புச் சிரிப்பழகி ! உன்றன் மௌன
மறுப்பாலே நெருப்பானேன் எனது மேனி.

இரண்டுமுறை நான்கடிதம் எழுதி விட்டேன் ;
இரண்டுகடன் என்னிடத்தில் பட்டுவிட்டாய் !
திரண்டசுவைத் தேனாப்பிள் பழமே ! உன்றன்
திருவாயில் நானூறு கடன்கள் பெற்று
வறியவனாய் மாறுதற்கு விரும்பு கின்றேன் ;
வள்ளலுனைப் போற்றுகின்ற தன்றி வேறு
தெரியாமல் ஏங்குகின்ற என்மேல், காதல்
தேன்துளிகள் ஒன்றிரண்டு தெளித்தால் என்ன ?

நானேறும் அரசாங்கக் குதிரை, என்னை
நடுவழியில் தள்ளியென்மேல் சிலநாள் ஏறும்,
வானேறும் பெரும்புகழும் வைரத்தங்க
மணிமுடியும் அப்போது சுமையாய்த் தோன்றும்.
' நான் ' என்ற எண்ணத்தை ஒதுக்கி, உள்ளம்
' நாம் ' ஆக அப்போது துடிது டிக்கும்.
தேனிலவே ! இந்நேரம் அந்த நேரம் !
தெருக்கதவம் உனக்காகத் திறந்தி ருக்கும்.

அரசாங்கப் பீரங்கி வயிற்றுக் குள்ளே
அடைபட்டுக் கிடக்கின்றேன் ; உன் மடிக்கு
விரைந்துவர விருப்பந்தான் ! ஓசையின்றி
வெடிக்காமல் வெளிவருமா அரசுக் குண்டு ?
பரிவாரம் தளபதிகள் என்றெனக்குப்
படாடோபத் தடையுண்டு. தென்றல் காற்றுக்(கு)
ஒருதடையும் இங்கிருப்போர் விதிக்க மாட்டார்;
ஓடிவரத் தடையென்ன? விடைதான் என்ன?

என்நண்பன் டுராக்கின் துணையி னாலே
எளிதாகும் உன்வேலை; உன்கண் செய்த
புண்ணுக்கு வேறொருவர் மருந்தெ டுத்துப்
பூசுவதால் தீராது. விரும்பி வந்தால்
உன்விருப்பம் அத்தனைக்கும் அதிகா ரத்தால்
உருக்கொடுப்பேன்: உன்னையும்நான் உயர்த்தி வைப்பேன்.
கண்விருப்பம் காட்டிப்பார்! உனது நாட்டுக்
கவலைகளை ஒருநொடியில் தீர்த்து வைப்பேன்.

# அன்பே என் மேகலையே!

முல்லையும், மேகலையும் சென்னையில் பயின்ற கல்லூரித் தோழிகள். முல்லை சேலத்து வீணை; மேகலை யாழ்ப்பாணத்து யாழ். ஒரு பெண்ணின் எண்ணத்தில் என்றும் பசுமையாக நிலைத்திருக்கும் நிகழ்ச்சிகள் மூன்று. அந்த எண்ணப் பசுமையை எழுத்தில் ஏற்றித் தன் தோழிக்கு அனுப்புகிறாள் முல்லை.

# கடை திறப்பு

முல்லையின் திருமணம். அந்த மங்கல நாளில் தன் ஆருயிர்த் தோழி மேகலையை எதிர் பார்க்கிறாள். ஆனால் அவள் வாழ்த்துத்தான் வந்து சேர்கிறது; வாழ்க்கையின் இளவேனிலாக வந்திருக்கும் அத் திருமண நாளில், தன் உள்ளத்தில் ஏற்பட்ட உணர்ச்சி அலைகளை ஒளிக்காமல் தேன் தமிழில் தீட்டி, உள்ளங்கலந்து பழகிய தோழி மேகலைக்கு அனுப்பிவைக்கிறாள்.

சொட்டுகின்ற நீர்த்துளிபோல் உருவங் கொண்ட
சுடுவெய்யில் ஈழத்தில் இருக்கும், பட்டுக்
கட்டுடம்பு மேகலையே! உடன்பயின்ற
கனிப்பேச்சுக் கல்லூரிக் கட்டில் தோழி!
கட்டுமரம் ஆகிவிட்டேன்; அலையில் லாத
கடல்மீது நடக்கிறது தோணி யோட்டம்!
கொட்டுமுழக் கோடெனக்குப் பெற்றோர், காதற்
கூட்டுறவுக் கடைதிறப்பு நிகழ்த்தி விட்டார்.

பட்டாடை சரசரக்கச், சாட்டைப் பின்னல்
படநாகக் கூந்தல்பூக் காடு தூக்க,
எட்டடிக்கண் ணாடியின்முன் அன்று நின்றே
என்னழகைக் கண்டவுடன், திருமணத்தின்
கட்டாயம் என்னவென்று புரிந்து கொண்டேன்!
கண்சிரிப்புத் தோழியர்கள் என்னும் காதற்
பட்டாள அணிவகுப்புத் தொடரச் சாயல்
பார்வைமயில் அடியெடுத்து நடந்து சென்றேன்

மணவறையில் அமர்ந்தவுடன் நெருங்கி உட்கார்
மடமானே! என்றொருத்தி நெருக்க லானாள்.
மணமகனை அவ்வாறே நெருக்க, அந்த
மாணிக்க்க் குன்றின்மேல் மோதிக் கொண்டேன்.
எனையாள வந்திருப்பார் மணக்கோ லத்தில்
எப்படித்தான் இருப்பாரென் பதனைக் காணக்
கனையோர விழியாலே குனிந்து பார்த்தேன்;
கையாலே ஒருதோழி இடிக்க லானாள்.

நூறு ரூபாய்கொடுத்துச் சடங்கை யெல்லாம்
நொறுக்கிவிட்டுத் திருமணத்தை நடத்தி வைக்க
ஈரோட்டுப் பெரியாரை அழைத்தி ருந்தார்
என் தந்தை செந்தில்வேல்; அவர்க்குப் பின்னால்
ஆராரோ வாழ்த்துரைத்தார்; அவற்றை யெல்லாம்
அரைகுறையாய் நான்கேட்டேன்; அருகில் உள்ள
போரேற்றை உள்ளத்தில் நினைத்த வண்ணம்
புதுக்கனவில் திளைத்திருந்தேன்; காதா கேட்கும்

விருந்துண்ண வாவென்றார்; எழுந்து சென்று
வெறுஞ்சோற்று நஞ்சுண்டேன்; வான வட்டப்
பருந்துசென்று மறையாதா மேற்கில், என்று
பதைப்போடு காத்திருந்தேன்; தவில டிப்போன்
பெருந்துன்பம் காதுக்குச் செய்தான்; பெண்கள்
பேச்சாலே பெரும்புயலை வரவ ழைத்தார்;
வருந்தென்றல் வாழ்த்துரைக்க மாலைக் காலம்
வந்தவுடன் தோழியர்கள் கிசுகி சுத்தார்.

பட்டாடை இரவுக்குப் பாரம் என்று
பாலாவி ஆடையினை எடுத்து வந்தார்.
கொட்டாவி விடாக்குண்டு மல்லி கைப்பூ
கொண்டையிலே ஏற்றென்றார்; புரிந்து கொண்டேன்.
எட்டிவைத்தேன்; காதலுக்கும் நாணத் துக்கும்
இழுப்புப்போர்! தோழியர்கள் உள்ளே தள்ளிப்
பட்டென்று சாத்திவிட்டார் கதவை; இந்தப்
பாரியின்தேர் மெதுவாகக் குலுங்கி நின்றேன்.

இனந்தெரிந்து மணந்தவரின் முன்னால், ஏனோ
இனந்தெரியா நாணம்; தா மரை அரும்பு
குனிந்தபடி முகங்குனிந்து நின்றேன்; மெல்லக்
குறும்பாக அவர்கனைத்தார்; குப்பென் றெல்லாம்
நனைந்துவிட்டேன் வியர்வையினால்; குதிரை வேகம்
நாடியிலே நான்பெற்றேன்; நடுக்கம் பெற்றேன்.
கனிதின்றால் என்னவென்று மெதுவாய்க் கேட்டுக்
கண்ணிவைத்தார்; கனிசுமந்த கனிநான் சென்றேன்.

கனிகேட்டார் எனத்தந்தேன்; அவரோ என்றன்
கல்வைத்த வளைக்கையைப் பற்றிக் கொண்டார்.
தனியான மின்சார ஓட்டம், இன்று
தன்னிணைப்புப் பெற்றதனால் அதிர்ச்சி பெற்றேன்.
மணிமார்பில் எனையேந்தித், தொங்கு கின்ற
மாம்பழத்தை விரலாலே தூக்கு தல்போல்
கனிமுகத்தைக் கையாலே நிமிர்த்திப் பார்த்தார்;
கண்ணிரண்டும் வெட்கத்தால் கூம்பி விட்டேன்.

எத்தனையோ புதுக்கேள்வி கேட்டார்; இன்னும்
என்னென்ன மோசெய்தார்; ஆனால் நானோ
அத்தனைக்கும் ஊம்என்றும் ஊகூம் என்றும்,
அரைச்சத்தம் முழுச்சத்தம் கொடுத்தேன்; காதற்
புத்தகத்தின் முகவுரையை அவர்மு டித்துப்
புதுமொட்டின் புறவிதழை நீக்க லானார்,
மத்தாப்புப் போல்நாணச் சிவப்பால் மேனி
மாறிவிட்டேன்; சடக்கென்று விளக்க ணைத்தேன்.

மின்னற்பூச் சிரிப்பதுபோல் எம்மைப் பார்த்து
மேலிருந்த சிறுவிளக்குச் சிரிக்க, இந்தக்
கின்னரத்தை அவர் மீட்ட லானார்; யாரோ
கேலிசெய்து சிரிக்கின்ற சத்தத் தாலே
என்னுள்ளம் திடுக்கிட்டேன்; கதவின் ஓரம்
இருப்பாளோ தோழியென்று நினைத்தேன்; இல்லை
சின்னவிரல் மீதிருக்கும் சதங்கை மிஞ்சிச்
சிரிப்பென்று நானதனைக் கழற்றி வைத்தேன்.

தைமாதம் திருமணத்தை நடத்துகின்ற
தமிழர்களை நான்போற்று கின்றேன்; தண்ணீர்ப்
பொய்கையெல்லாம் நடுங்குகின்ற இந்த நாளில்
புதுக்கணப்புப் போட்டபடி இரண்டுபேரும்
ஐம்புலனை ஒருபுலனாய் ஆக்கும் போரில்
அரையிரவைக் கழித்துவிட்டோம்; விட்டு விட்டுப்
பெய்கின்ற மழைபோல எஞ்சி நின்ற
பின்னிரவைக் கழித்தபடி உறங்கி விட்டோம்.

குப்பையிலே கொலுவிருக்கும் கோழிச் சேவல்
கூவலுக்கு விழித்தெழுந்தேன்; என்கண் ணாளர்
மப்பில்லா வானத்து நிலாமு கத்தை
மலர்விழியால் பார்த்தபடி நின்றேன்; ஓடிக்
கொப்பறையில் காய்ந்திருந்த நீரை மொண்டு
குளித்துலந்தேன்; காதருகில் வந்தோர் தோழி
'எப்படித்தான் இருந்ததடி புதுத்தேர் ஓட்டம்?'
எனக்கேட்டாள்; நாணத்தால் கூனிப் போனேன்.

இளவேனில் பெண்களுக்கு மணந்தான் என்ப
தின்றறிந்தேன்; ஐந்தருவி பொங்கு மிந்தக்
குளியலினைத் தள்ளிவைக்க லாமா? கல்வி
கூடாதென் றுரைக்கவில்லை; யாழ்ப்பா ணத்துக்
கிளிப்பேச்சு மேகலையே! புத்த கத்தைக்
கிழமாகிப் போம்வரையில் சுமப்ப தற்கா
பளிங்குமலை மார்பகத்தைப் பெற்றோம்; போடி
பயித்தியமே! திருமணத்திற் கழைப்ப னுப்பு!

# விதைக்கனி

ஒரு பெண்ணின் வாழ்க்கையில் முதன் முதலாக ஏற்படும் தாய்மை, புதுமையும் பூரிப்பும் தரக்கூடிய இன்ப நிகழ்ச்சி; அச்சங் கலந்த இன்பம்; பெருமிதம் கொள்ளும் பேறு; முல்லை முதன் முதலாகக் கருவுற்றிருந்தபோது என்ன உணர்வின்பங்களைப் பெற்றாளோ, அவற்றை அப்படியே கடிதத்தில் முடிந்து தோழிக்கு அனுப்புகிறாள்.

கண்மணி உன்கா துக்குக்
கரும்பான சேதி யொன்று.
பெண்மையால் விரைவில் நானோர்
பெரும்பயன் பெறப்போ கின்றேன்.
பொன்னுடல் காரி இன்று
பொருளுடல் காரி யானேன் ;
என்மடி கனத்துப் பார
இளநீர்த்தெங் காகி விட்டேன்.

உண்மைதான்! ஆற்ற லாலே
உயர்ந்தவர் ஆண்கள்; ஆனால்
பண்மொழி! கவிஞ ரைப்போல்
படைப்பாற்றல் நமக்குத் தானே ?
மண்ணுழக் கலப்பை யாகும்
மதிப்பன்றி, ஆட வர்க்குப்
பெண்மைபோல் தம்மில் ஒன்றைப்
பிறப்பிக்கும் பெருமை யுண்டா?

இருந்திருந் தாற்போல் ஓர்நாள்
　　இருமுறை வாந்தி செய்தேன்.
'விருந்தென்றால் பெண்வ யிற்றை
　　விற்பவள்' என்றார் அன்பர்.
பொருந்தாத இந்தக் கூற்றைப்
　　பொறுக்காத மாமி. எங்கள்
குறுந்தொடி இந்த மாதம்
　　குளிக்கவே இல்லை' என்றார்.

கடல்குளித் தேறு கின்ற
　　கதிரவன் தோன்று முன்னால்
உடல்குளித் தவரை ஓடி
　　உசுப்புவேன்; ஆத லாலே
மிடல்பெற்ற தோளர், நெற்றி
　　மேலேற விழித்தார்; 'இன்றைக்(கு)
உடல்தொட்டுத் தழுவும் நேரம்
　　உம்ஐயம் தீரும்' என்றேன்.

மொட்டுடல் மேனி என்றன்
　　முதல்வரின் பழக்கத் தாலே
கட்டவிழ் மலராய் ஆனேன்;
　　கணங்கூட அவரை இந்நாள்
விட்டுநான் பிரிவ தற்கு
　　விரும்புவ தில்லை; என்னைத்
தொட்டுக்கொண் டிருங்கள் என்று
　　தொணுப்புவேன்; அவரும் செய்வார்.

பொட்டுக்கும் பூக்க ளுக்கும்
புதுப்புதுச் சேலை கட்டும்
பிட்டுக்கும் தேங்கு ழற்கும்
பிரியம்நான் கொண்டே னேனும்
கொட்டைப்பு ளிக்கும், நன்றாய்க்
கொழித்தமண் ணுக்கும், மாங்காய்த்
தட்டுக்கும் கொண்ட ஆவல்
தணியவே இல்லை நாக்கில்.

வயிற்றினில் இன்பத் துள்ளல்
வளர்வதை அறிந்த என்தாய்
கயற்கருங் கண்ணிக் கின்று
கைவளை பூட்டல் என்றாள்.
அயற்புறத் தார்கள், சுற்றம்
அனைவரும் வந்து சேர்ந்தார்;
செயற்கருஞ் செயல்செய் தார்போல்
செம்மாந்து வீற்றி ருந்தேன்.

பேறுகா லம்நெ ருங்கப்
பெற்றோரும் மாமி யாரும்
வேறுபேச் செதுவும் பேச
விரும்புவ தில்லை; வாழை
தாறுபோ டுதற்கு முன்னால்
தலைவனா? பெண்ணா? என்ற
போரிலே உள்ளார்; நானோ
பூரிப்புத் தேரில் உள்ளேன்.

## (இ) பிள்ளைத் தமிழ்

பிள்ளைப் பேறு பெண்மையின் நிறைவுக்கு இயற்கை அளிக்கும் இன்பப் பரிசு. பெற்றோர் தம்மை வேறு ஓர் உருவில் கண்டு உள்ளம் பூரிக்க, உருவாக்கும் அமுதப் படிமம். உயிர்த்ளிர்க்கத் தீண்டி, யாழையும் குழலையும் பேச்சால் தோற் கடித்துத் தவழும் மடி நிலவு. இந்த உயிரின் மறு பதிப்பைப் பெற்றெடுத்த முல்லை, அதனால் தான் பெறும் இன்ப வருவாயை எழுத்தாக்கித் தோழிக்கு அனுப்புகிறாள்.

படிப்புமே கலையே? காமம்
பழகாத உடுக்கை ஆடை
இடுப்புமே கலையே! காலை
ஈழத்தில் வைத்து, நெஞ்சை
வடுப்படாத் தமிழில் வைத்து
வாழ்கின்ற தமிழர்க் கிந்நாள்
விடுக்குமென் வாழ்த்தைச் சொல்லு;
விரைவினில் மடல்தி ருப்பு.

திங்கள்வாழ் மண்ட லத்தில்,
தென்னாப் பிரிக்க நாட்டில்,
துங்குவாழ் மலேயா, சாவா,
தொலைவுமோ ரீசில், மற்றும்
எங்குவாழ் கின்ற போதும்
இத்தமிழ்க் குலத்தைச் சேர்க்கும்
சங்கிலி தமிழே என்று
சாற்றுவாய் அன்புத் தோழி!

உழுந்தொழில் உழவன் ஓர்நாள்
உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கப்
பழந்தமிழ்ப் புதையல் ஒன்றைப்
படைச்சாலில் பெற்ற தைப்போல்
அழுந்தொழிற் குழந்தை பெற்றேன்.
அன்னமே! சொல்லப் போனால்
குழந்தையும் புதையல் என்று
கொள்வதில் குற்ற மில்லை.

செம்மாது ளைபி ளந்த
சிறியசெவ் வாயால் தோழி!
அம்மாவென் றக்கு ழந்தை
அமுதசொல் தமிழே! இந்தத்
தைமாதம் வரைவ யிற்றில்
தங்கியே கற்ற பாடம்
அம்மா தான் போலும்; நெஞ்சை
அள்ளுமித் தமிழ்தான் போலும்.

பிள்ளையைப் பெறுவேன் என்று
பெற்றவர் நினைத்தார்; இந்தக்
கிள்ளையோ என்னைப் போலோர்
கிழங்கினைப் பெற்றெ டுத்தேன்.
உள்ளத்துச் சோர்வைக் காட்டி
உட்கார்ந்து கொண்டி ருந்த
வள்ளலைப் பார்த்தேன்; 'என்ன
வருத்தமா?' என்று கேட்டேன்.

'வருத்தமா! என்சி வந்த
வாழையே! பெற்ற இந்தக்
குருத்தினிப் பத்தே ஆண்டில்
குமரியாய் நிற்பாள்! நாமோ
கருக்கடை யோடு காதற்
கடைசாத்த வேண்டி நேரும்?
பிறைக்குலப் பெண்ணை முன்னால்
பெறுவது தொல்லை' என்றார்.

ஆர்வத்தோ டணைத்தெ டுப்பேன்;
அருகினில் கிடத்திப் பார்ப்பேன்;
பார்வையால் அந்தத் தேனைப்
பருகுவேன்; உச்சி மோந்து
வேர்வையைத் துடைப்பேன்; கீரை
விதைக்கண்ணின் அழகை யுண்பேன்;
மார்பினை அதுசு வைக்கும்
மயக்கத்தில் மகிழ்ந்தி ருப்பேன்.

வாணிபம் முடித்து விட்டு
வருகின்ற கணவர் கையில்
ஆணிப்பொன் மேனிச் சிட்டை
அள்ளிநான் கொடுப்பேன்; அந்தக்
காணிக்கை முத்தை ஏந்திக்
கனிவுடன் அணைப்பார்; பின்னர்
பானைத்தேன் என்னை மிக்க
பசியுடன் கண்ணால் பார்ப்பார்.

*பங்குக்கு வந்த செல்வம்*
*பகலெல்லாம் தூங்கித் தீர்க்கும்;*
*கங்குலில் கணவர் என்னைக்*
*கனைப்பினால் அழைப்பார்; பின்னர்*
*எங்களுக் குள்ளே சற்றே*
*இடைவெளி குறையும்; ஆலைச்*
*சங்கைப்போல் குழந்தை கத்தும்!*
*சட்டென்று நகர்ந்து கொள்வோம்!*

# தெய்வீகப் பெருஞ்சுமை

'சமயமும் சமதருமமும்' என்பதுபற்றி உருசிய நாட்டின் புரட்சித் தந்தை லெனின் எழுதியுள்ள கட்டுரையின் பிழிவு இது. கருத்து அவருடையது; கவிதை என்னுடையது.

எலிப்பொறிதான் சமுதாயம்; இந்த நாட்டில்
ஏழைகளின் நல்வாழ்வை மிகக் குறைந்த
நிலப்பிரபும் செல்வர்களும் சுரண்டு கின்றார்,
நீர்ப்பாம்பு திமிங்கிலத்தை விழுங்க லாமா?
அலுத்துவரும் பாட்டாளி வாங்கும் கூலி
ஆவியினை வைத்திருக்கத் தானே யன்றிக்
கழுத்துவரை வயிறுகொண்ட பணக்கா ரன்போல்
கட்டிலின்பம் காண்பதற்கா? இல்லை யில்லை.

ஆடுகளே கொடுவாளைத் தீட்டித் தம்மை
அறுப்பவர்க்குக் கொடுப்பதுபோல், ஓய்வில் லாமல்
பாடுபடும் பாட்டாளி மக்கள், ஏய்க்கும்
பணக்காரர் பைகளையே நிரப்பு கின்றார்.
கேடுகெட்ட இந்நிலைமை மாறா விட்டால்
கேவலந்தான் நம்வாழ்வில் மிஞ்சும்; இந்த
நாடுபெற்ற சமுதாயம் என்றென் றைக்கும்
நலிகின்ற சமுதாயம் ஆகிப் போகும்.

அல்லலுறும் பாட்டாளி பொருளா தார
அடிமையினால் அரசியலில் அடிமை யாவான்;
கிள்ளுகின்ற பசியவனைச் சமுதா யத்தில்
கீழ்மகனாய் ஆக்கிவிடும்; பளிங்கு போன்ற
உள்ளத்தைப் பாழாக்கும்; உயிரின் மேலாம்
ஒழுக்கத்தைக் கெடுத்துவிடும்; முதலா ளித்வ
முள்ளிருக்கும் வறுமை குத்தும்; நம்மை
மொட்டையடிக் கும்சுரண்டல் இருந்தே தீரும்.

கையலுத்து வருந்துகின்ற ஏழை மக்கள்
களைப்படைந்த தோள்களின்மேல், அழுத்துகின்
தெய்வீகப் பெருஞ்சுமையே சமயம்; தங்கள்
தேவைக்குப் போராடித் தோற்ற மக்கள்
பொய்யான கடவுளையும், புராணம் கூறும்
புரட்டினையும் நம்புகின்றார்; சொர்க்க வீடு
மெய்யென்றும் இவ்வுலகில் கிட்டா இன்பம்
மேலுலகில் கிட்டுமென்றும் எண்ணு கின்றார்.

வறியவரை வறியவராய் வைத்தி ருக்க
வகைசெய்யும் ஏற்பாடே 'தான தர்மம்!'
'வறியவர்க்குக் கொடுப்பதனால் பணக்கா ரர்க்கு
வானுலகம் வரவேற்பு நல்கும்; இங்குப்
பொறுமையுடன் இருக்கின்ற ஏழை, வானப்
பொன்னுலகில் புத்தின்பம் பெறுவான்' என்று
குருமார்கள் கூறுகின்றார்; பயணச் சீட்டும்
கொடுக்கின்றார்; கொழுக்கின்றார் கொள்ளையாலே!

சமயம்ஓர் அபின்; அறிவை மயங்க வைத்துச்
சாய்க்கின்ற மதுப்பள்ளம்; அதனுள் மக்கள்
தமதுரிமை அத்தனையும் தள்ளி விட்டுத்
தாங்களும்வீழ் கின்றார்கள்; ஆனால் இன்று
நமதருமைத் தோழரெல்லாம் விழித்துக் கொண்டார்.
நரைத்தாடிக் குருமார்க்குச் சொர்க்கத் தோடு
சமயத்தை விட்டுவிட்டார்; இங்கி ருக்கும்
சமதரும உலகத்தைத் தாமே கொண்டார்.

எந்தஒரு சமயத்தைத் தழுவு தற்கும்,
எம்மதமும் சம்மதமே என்ப தற்கும்
சொந்தமதம் எனக்கெதுவும் இல்லை யென்று
சொல்லுகின்ற நாத்திகனாய் வாழ்வ தற்கும்,
இந்தமண்ணில் எல்லார்க்கும் உரிமை வேண்டும்.
எழுச்சிமிக்க பாட்டாளி மக்கள் கட்சி
சொந்தச்சிந் தனைக்கார நாத்தி கர்கள்
சூழ்ந்திருக்கும் பாசறையாய் விளங்க வேண்டும்.

அரசாங்கப் பதிவேட்டில் மக்கள் பேரை
அடுத்துவரும் மதக்குறிப்பு யாவும், சற்றும்
இரக்கமின்றி எடுத்தெறியப் படுதல் வேண்டும்.
இந்நாட்டுப் பொதுப்பணத்தைக் கோவி லுக்கும்,
குருக்களுக்கும் மானியமாய் அன்பளிப்பாய்க்
கொடுக்கின்ற பகற்கொள்ளை ஒழிய வேண்டும்.
குருத்திளைஞர் பள்ளிகளை மடமை விற்கும்
குருக்களிட மிருந்தின்றே மீட்க வேண்டும்.

கோவிலிலே வழிபாடு நடத்து கின்ற
குருக்களுக்கு மாளிகையில் என்ன வேலை?
ஆவியுடல் பொருள்யாவும் தொண்டுக் காக
அர்ப்பணிக்க வேண்டியவர், அரசாங் கத்துச்
சாவியின்மேல் கண்வைத்தால், இனிமேல் இந்தச்
சமயத்தின் கடைக்காலே தகர்ந்து போகும்.
பாவத்தை மன்னிக்கும் குருமார், தாமும்
பாவத்தைச் செய்யாமல் இருக்க வேண்டும்.

நாத்திகமே நம்கட்சி நடுந ரம்பு!
நலம்பெருக்கும் விஞ்ஞானத் துணையால், இந்த
ஆத்திகத்தின் முதுகெலும்பை முறிப்போம்; நம்மை,
அழுத்துகின்ற மதச்சுமையை, அறிஞர் நெஞ்சில்
பூத்திருக்கும் பகுத்தறிவுக் கொள்கை யாலே
புரட்டுதற்கு வழிவகுப்போம்; புரட்சிக் காரர்
சாத்திரத்தீ முன்னாலே, சமய மென்னும்
சருகென்ன செய்துவிட முடியும் இங்கே?

சிலுவையினை நம்பாத பேர்க ளுக்குச்
சிரச்சேதம் தந்தார்கள்; இறைவன் வந்து
கொலுவிருக்கும் கோவிலிலே நல்ல வர்க்குக்
கொலைத்தீர்ப்புக் கொடுத்தார்கள்; பெண்ணினத்தைப்
பலியாடு போல்நெருப்பில் எறிந்து நெஞ்சம்
பதைபதைக்கக் கொன்றார்கள்; இந்தக் கோயில்
எலியாரின் நடத்தைகளைக் கண்கா ணிக்க
இனியிங்குக் காவலரை அமர்த்த வேண்டும்.

உரிமைக்குக் கொடியெடுத்துப் போர் நடத்தும்
உழைப்பாளித் தோழர்களே! இறந்த பின்பு
மறுஉலகில் ஒன்றுபடும் எண்ணம் வேண்டாம்.
மண்ணுலகில் விண்ணுலகை வரவ ழைக்கப்
பொறுமையுடன் போரிடுவீர்! கோயிற் கூட்டம்
புதுத் தடைகள் நம்வழியில் வைத்தால், சற்றும்
இரக்கமற்ற போர்தொடுப்போம்; மக்கள் ஆற்றல்
எந்நாளும் இவ்வுலகில் தோற்ப தில்லை.

# கங்கையின் காதலன்

பண்டித நேரு அவர்கள் சிறந்த இலக்கிய அறிஞர்; வரலாற்றாசிரியர்; ஆங்கில மொழியை நாடித் துடிப்பறிந்து நடத்தும் ஆற்றல் மிக்க எழுத்தாளர்; உருதுமொழியில் கவிதை எழுதும் ஆற்றலும் கைவரப் பெற்றவர். இவர் இந்திய மக்களுக்கு விட்டுச் சென்ற இறுதி மடல் (will) ஒரு சுவையான இலக்கியம்.

அதில் நேரு தம் கொள்கைகளைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்; தம் ஆவல்களுக்கு வரி வடிவம் கொடுத்திருக்கிறார். இந்திய நாட்டின் முக்காலச் சிறப்பையும் கங்கையோடு பக்குவப்படுத்தி வைத்திருக்கிறார். பழமைச் சிறப்பின்மீது கொண்ட பற்றையும், பழமைக்கும் புதுமைக்கும் இடையில் நிகழும் அவரது உளப்போராட்டத்தையும், இதில் காணலாம். இக்கருத்துகளைக் கவிதைக் கண் காட்சி ஆக்கியிருக்கிறேன்.

துள்ளுநீர் பாயுங் கங்கை
தோன்றுமென் னாட்டார் என்னை
உள்ளத்தில் சிலையாய் வைத்தார்;
ஊற்றெடுத் தொழுகு மன்பு
வெள்ளத்தில் மூழ்க டித்தார்;
வேறதற் கீடாய் நானோ
எள்ளள வன்பைக் கூட
இன்னமுங் கொடுக்க வில்லை.

ஏற்றத்தைப் போல ஏறி
இறங்கிடும் என்றன் மூச்சுக்
காற்றுள்ள வரையில் சற்றும்
கண்துஞ்சல் இன்றி, நாட்டார்
போற்றிடும் தொண்ட னாவேன்.
புகழுக்கும் நம்பிக் கைக்கும்
ஆற்றிடும் அன்பி னுக்கும்
அருகனாய் நடந்து கொள்வேன்.

வெள்ளையர் ஆட்சி வீழ
வீரத்தைக் காட்டி நின்ற
துள்ளுதோள மறவ ருக்கும்,
தோள்கொடுத் தாட்சித் தேரைத்
தள்ளிடும் நண்ப ருக்கும்
தாங்கரும் மகிழ்ச்சி யோடென்
உள்ளத்தில் பொங்கும் நன்றி
உணர்ச்சியை வழங்கு கின்றேன்.

கற்றரைச் சிறைக்கூடத்தில்
கடுந்துயர் மிகவும் பட்டும்
ஒற்றிய பிரம்ப டிக்கே
உடம்பினைத் தந்து நைந்தும்
பற்பல பேரைக் குண்டுப்
பாம்புக்குப் பறிகொ டுத்தும்
பெற்றஇச் சுதந்த ரத்தைப்
பேணுதல் கடமை யாகும்.

சமயத்தைச் சடங்கைப் பொய்மைச்
சாத்திரக் கூத்தை யெல்லாம்
உமியைப்போல் கருதி யென்றன்
உள்ளத்தில் ஒதுக்கி வாழ்ந்தேன்.
நமையும்ஏ மாற்றிக் கொண்டிந்
நாட்டை ஏமாற்று தற்காய்ச்
சமைத்தபொய்ச் சடங்கை யென்றன்
சாவுக்குச் செய்ய வேண்டாம்.

பொங்கிடும் வெள்ளம் வீங்கப்
புதுப்புனல் பாய்ச்சு கின்ற
கங்கையை நினைக்குந் தோறுங்
களிமகிழ் வெய்து கின்றேன்.
திங்களும் வானு மாகத்
தித்திப்புங் கொய்யா வாகக்
கங்கையும் நானும் நீங்காக்
காதலா லிணைந்து விட்டோம்.

மாங்குயில் கூவும் நாளில்
மழைசரந் தொடுக்கும் நாளில்
பூங்கர மசைத்து வேனில்
பூப்பந்தல் போடும் நாளில்
தாங்கரும் மகிழ்ச்சி வெள்ளம்
தாவிடக் கங்கை யோரம்
தேங்கிய அழகை யுண்டு
திரிந்துநான் மகிழ்ந்த துண்டு.

இந்திய நாட்டு மக்கள்
இதயத்தில் பாயு மாறு!
சிந்தனை வீரம், நம்மோர்
சேர்த்தநற் கலைகள் வாசச்
சந்தனம் நாக ரீகம்
சார்ந்தநம் பிக்கை யாவும்
உந்தியே பாயு மிந்த
உயர்மலைக் கங்கை யாறு.

என்னுடல் வீழ்ந்த பின்னர்
எரித்தஅச் சாம்பல் தன்னைப்
பொன்னொளிக் கங்கை யாற்றில்
போடுக கொஞ்சம்; பின்னர்
என்னுயிர்க் குயிர தான
இந்திய நாட்டில் உள்ள
பண்ணையில் தூவ வேண்டும்
பறக்கின்ற ஊர்தி ஏறி.

கங்கையில் எனது சாம்பல்
கலப்பதால் ஆத்தி கத்தில்
சங்கமம் ஆனேன் என்று
சற்றும்நீர் எண்ண வேண்டாம்.
கங்கையிந் நாட் டின் சின்னம்;
காக்கின்ற உழவ ரெல்லாம்
தங்கிவாழ் பண்ணை தானித்
தாயகத் துயிர தாகும்.

பழமையின் பெயரா லிந்தப்
பாரத நாட்டில் நீங்காப்
பிளவினைச் சமயம் சாதி
பெருக்கிச்சீ ரழித்திட் டாலும்
பழமையிற் செழித்த நம்பண்
பாட்டினைப் போற்றி யன்பால்
தொழுதனன் இறுதி யாகத்
துணைக்கரங் குவித்து, வாழி!



## பாட்டுச் சிற்பி

# பாவலர் [illegible] அவர்களின்

## நூல்கள்

### பாடல்கள்

- கடை திருப்பு 5—00
- பனித் துளிகள் 6—00
  (தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு நூல்)
- பாட்டும் கதையும் 1—50
- சந்தனப் பேழை 3—00
- நக்கண்ணை (நாடகக் காப்பியம்) அச்சில்


### வரலாறு

- கென்னடி வீர வரலாறு 2—00
- நாட்டுக்கொரு நல்லவர் 2—00
- பாவேந்தர் நினைவுகள் 7—00
- அரும்புகள் மொட்டுகள் மலர்கள் 10-00
- குயில் கூவிக்கொண்டிருக்கும் 6—50

### பொது நூல்கள்

- வள்ளுவர் வழியில் காந்தியம் 2—00
- பாரும் போரும் 2—00
- மலரும் மஞ்சமும் (அச்சில்) 6—00
- காந்தியின் வாழ்க்கையிலே 8—00
- தமிழகத்தில் குறிஞ்சி வளம் 10—00

# பாட்டுச்சிற்பி பாவலர் முருகு



(இ—வ) வேலா, திருக்குறளார், பாராட்டுப்பெறும் பாட்டுச்சிற்பி

உலகப் பெரும் புகழ்ப் பாவலரும், பேராசானுமாகிய திருவள்ளுவப் பெருமானின் தொண்டனாகிய நான், தகுதியுள்ள பாவலர் முருகுசுந்தரம் அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்துப் 'பாட்டுச்சிற்பி' என்னும் பட்டத்தை அளிக்கிறேன்.

இவர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களோடு பல ஆண்டுகள், நெருங்கிப் பழகியவர்; அவரால் பாராட்டப் பெற்றவர்; அரசாலும் பாராட்டப் பெற்றவர்; பரிசும் பெற்றவர். பாவேந்தரைப் பற்றிய பல நூல்களை எழுதியவர்; இன்னும் எழுதிக்கொண்டிருப்பவர். **கடை திறப்பு, பனித்துளிகள்** ஆகியன பாட்டுச் சிற்பியின் கருத்துச் சிற்பங்களாம். இன்று உலவிவரும் பெரும் பாவலர்களுள் சிறப்புத் தகுதி பெற்றவர். இவர், வாழும் காலத்தில் பாராட்டுப் பெறும் வளமான பாவலர்.

*17—1—'82* —**திருக்குறளார் வீ. முனிசாமி**